## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2017

# மதிப்பீட்டு அறிக்கை

# 72 - தமிழ்

ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

முழுப்பதிப்புரிமையுடையது.

# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2017

# மதிப்பீட்டு அறிக்கை

## 72 - தமிழ்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையானது இலங்கையின் உயர்மட்ட இரண்டாம்நிலைக் கல்வியின் இறுதிச்சான்றிதழ் பரீட்சையாகும். உயர்மட்ட இரண்டாம்நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவுமட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப்பரீட்சையின் முக்கியநோக்காக இருந்தபோதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவுசெய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப்பரீட்சையாகவும் தேர்வுப்பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம்நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது இப்பரீட்சைக்காக 2017 ஆம் ஆண்டில் 206630 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 46700 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சிசெய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும்பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடப்பொறுப்புக் கல்விப்பணிப்பாளர்கள், பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பாகங்களைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) தமிழ்ப்பாடத்தின் நோக்கம், பாடஅடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பாகம் I இல் அடங்கியுள்ளன. இப்பாகத்தில் பாடத்திற்குத்தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ளவிதம், மாவட்டமட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ளவிதம், வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாடஅடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் தமிழ்ப்பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டவிதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ளவிதம் என்பனபற்றி விரிவாகக் குறிப்பிடும் பாடஅடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2017 பரீட்சையில் தமிழ்ப்பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பாகம் II இல் அடங்கியுள்ளன. அதில் வினாப்பத்திரம் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும்திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள், பாடஅடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதமபரீட்சகர்கள், மேலதிக பிரதமபரீட்சகர்கள், உதவிப்பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபுரீதியான சோதனைக்கோட்பாடு (Classical Testing Theory) மற்றும் உருப்படித்துலங்கல் கோட்பாடு (Item Response Theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்திலுள்ள ஒவ்வொருவினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள், கற்றல்-கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையின் பாகம் III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள், அத்தேர்ச்சிமட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன தொடர்பாக இந்த அறிக்கையானது பெரிதும் துணைபுரியும் என நம்புகின்றேன். **எதிர்காலத்தில்** தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக் கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதமபரீட்சகர்கள், மேலதிக பிரதமபரீட்சகர்கள், உதவிப்பரீட்சகர்கள், ஆர்வத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீ. சனத் பூஜித**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2019.12.16
ஆய்வு அபிவிருத்திக் கிளை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | பீ. சனத் பூஜித<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்தி கிளை) |
| நெறிப்படுத்தல் | - | செ. பிரணவதாசன்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| இணைப்பும் தொகுப்பும் | - | மு. செந்தில் வதனி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| செவ்விதாக்கம் | - | பேராசிரியர் வ. மகேஸ்வரன்<br>பேராதனைப் பல்கலைக்கழகம்<br><br>துரைசாமி இராஜேந்திரம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு நிலை)<br>திறந்த பல்கலைக்கழகம்<br><br>சோதிநாயகி பாலசுந்தரம்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வு நிலை)<br>இலங்கை பரீட்சைத் திணைக்களம் |
| ஆக்கக்குழு | - | கலாநிதி இரகுபரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>தென்கிழக்குப் பல்கலைக்கழகம்<br><br>சி. தங்கரூபன்<br>ஆசிரியர்<br>யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி<br><br>அ.கேசராஜா<br>ஆசிரியர்<br>பது/ கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயம்<br>பசறை<br><br>இ. தேவயோகராணி<br>ஆசிரியர்<br>கமு/ அல்பஹ்ரியா மத்திய கல்லூரி<br>தொட்டவத்த, பாணந்துறை<br><br>எம்.எஸ்.எப். மிஸ்பா<br>ஆசிரியர்<br>கே/மாவ/ நூராணியா மு.ம.வி.<br>உயன்வத்த, தெவனகல<br><br>க. சந்திரகுமாரி<br>ஆசிரியர்<br>கொ/விவேகானந்தாக் கல்லரி<br>கொழும்பு |
| கணினி பக்க வடிவமைப்பு | - | காஞ்சனா சுப்ரமணியம்<br>கணினி தரவுப் பதிவாளர் |
| முகப்பு அட்டை வடிவமைப்பு | - | ஆர்.எம்.நிலுபுல் ஷெஹான் யசரடன |

# உள்ளடக்கம்


**பாகம்** I

**பக்க எண்**

1.0 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்**

**1.1 பாடக் குறிக்கோள்கள்** 1

**1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2 பரீட்சார்த்திகளால் பெறப்பட்ட தரங்கள் 2

1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்ற தரங்கள் - மாவட்டங்கள் அடிப்படையில் 3

1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 4

**1.3. பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாத்தாள் I இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 5

1.3.2 வினாத்தாள் I இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 5

1.3.3 வினாத்தாள் I - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 6

1.3.4 வினாத்தாள் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 7

1.3.5 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 7

1.3.6 வினாத்தாள் II - வினா 1 (அ) பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 8

1.3.7 வினாத்தாள் II - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 9

**பாகம்** II

**2.0 வினாத்தாள்களுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள்**

**2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாத்தாள் I - கட்டமைப்பு 10

2.1.2 வினாத்தாள் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள் 11

2.1.3. வினாத்தாள் I இற்கு விடையளித்தமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் 36

**2.2 வினாத்தாள் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாத்தாள் II - கட்டமைப்பு 37

2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும் 38

2.2.3 வினாத்தாள் II இற்கு விடையளித்தமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும். 70

**பாகம் III**

**3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

**3.1 விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்** 71

**3.2 கற்றல் கற்பித்தல் செயன்முறைகள் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்** 72

## பாகம் I

# 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்

## 1.1 பாடக் குறிக்கோள்கள்

- மொழிவழியாகத் தெளிவாகச் சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தொடர்பாடலுக்கும் வேண்டிய தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- இலக்கியத்தை விளங்கிக்கொள்ளவும் இரசிக்கவும் விமர்சனஞ்செய்யவும் வேண்டிய தேர்ச்சிகளை விருத்திசெய்துகொள்ளல்.
- பல்வேறு இலக்கியவடிவங்களின் அமைப்பை அறிந்து அவற்றுடன் தொடர்புடைய ஆக்கங்களைப் படைக்குந்திறனை வளர்த்துக்கொள்ளல்.
- தமிழ் இலக்கியவரலாற்றுப் போக்கினையும் அதன் பண்புகளையும் விளங்கிக்கொள்ளல்.
- அடிப்படை இலக்கண அறிவை விருத்தி செய்துகொள்ளல்.
- இலக்கிய வழிவரும் மானுடப்பண்பாட்டு விழுமியங்களை இனங்கண்டு வளர்த்துக்கொள்ளல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| பாடம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | மொத்தம் |
|---|---|---|---|
| தமிழ் | 10513 | 3309 | 13822 |

அட்டவணை 1

### 1.2.2 பரீட்சார்த்திகளால் பெறப்பட்ட தரங்கள்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 816 | 7.76 | 28 | 0.85 | 844 | 6.11 |
| B | 2102 | 19.99 | 170 | 5.14 | 2272 | 16.44 |
| C | 3149 | 29.95 | 526 | 15.90 | 3675 | 26.59 |
| S | 3320 | 31.58 | 1331 | 40.22 | 4651 | 33.65 |
| W | 1126 | 10.71 | 1254 | 37.90 | 2380 | 17.22 |
| மொத்தம் | **10513** | **100.00** | **3309** | **100.00** | **13822** | **100.00** |

அட்டவணை 2

1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்ற தரங்கள் - மாவட்டங்கள் அடிப்படையில்

| மாவட்டம் | தோற்றியவர்களது எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர்கள் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர்கள் | | திறமைச் சித்தி (C) பெற்றவர்கள் | | சாதாரண சித்தி (S) பெற்றவர்கள் | | சித்தி (A+B+C+S) பெற்றவர்கள் | | சித்தி பெறாதவர்கள் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 238 | 6 | 2.52 | 29 | 12.18 | 55 | 23.11 | 101 | 42.44 | 191 | 80.25 | 47 | 19.75 |
| 2. கம்பஹா | 160 | 7 | 4.38 | 30 | 18.75 | 45 | 28.13 | 61 | 38.13 | 143 | 89.38 | 17 | 10.63 |
| 2. களுத்துறை | 160 | 15 | 9.38 | 32 | 20.00 | 47 | 29.38 | 52 | 32.50 | 146 | 91.25 | 14 | 8.75 |
| 4. கண்டி | 566 | 42 | 7.42 | 99 | 17.49 | 150 | 26.50 | 194 | 34.28 | 485 | 85.69 | 81 | 14.31 |
| 5. மாத்தளை | 159 | 20 | 12.58 | 33 | 20.75 | 41 | 25.79 | 48 | 30.19 | 142 | 89.31 | 17 | 10.69 |
| 6. நுவரெலியா | 892 | 106 | 11.88 | 249 | 27.91 | 273 | 30.61 | 238 | 26.68 | 866 | 97.09 | 26 | 2.91 |
| 7. காலி | 35 | 3 | 8.57 | 7 | 20.00 | 12 | 34.29 | 6 | 17.14 | 28 | 80.00 | 7 | 20.00 |
| 8. மாத்தறை | 57 | 5 | 8.77 | 7 | 12.28 | 20 | 35.09 | 17 | 29.82 | 49 | 85.96 | 8 | 14.04 |
| 9. அம்பாந்தோட்டை | 14 | | 0.00 | 3 | 21.43 | 5 | 35.71 | 5 | 35.71 | 13 | 92.86 | 1 | 7.14 |
| 10. யாழ்ப்பாணம் | 1463 | 128 | 8.75 | 297 | 20.30 | 442 | 30.21 | 428 | 29.25 | 1295 | 88.52 | 168 | 11.48 |
| 11. கிளிநொச்சி | 334 | 26 | 7.78 | 56 | 16.77 | 100 | 29.94 | 98 | 29.34 | 280 | 83.83 | 54 | 16.17 |
| 12. மன்னார் | 235 | 6 | 2.55 | 61 | 25.96 | 70 | 29.79 | 83 | 35.32 | 220 | 93.62 | 15 | 6.38 |
| 13. வவுனியா | 370 | 17 | 4.59 | 91 | 24.59 | 117 | 31.62 | 105 | 28.38 | 330 | 89.19 | 40 | 10.81 |
| 14. முல்லைத்தீவு | 301 | 18 | 5.98 | 61 | 20.27 | 94 | 31.23 | 99 | 32.89 | 272 | 90.37 | 29 | 9.63 |
| 15. மட்டக்களப்பு | 1064 | 87 | 8.18 | 223 | 20.96 | 302 | 28.38 | 324 | 30.45 | 936 | 87.97 | 128 | 12.03 |
| 16. அம்பாறை | 738 | 63 | 8.54 | 128 | 17.34 | 199 | 26.96 | 249 | 33.74 | 639 | 86.59 | 99 | 13.41 |
| 17. திருகோணமலை | 398 | 22 | 5.53 | 53 | 13.32 | 115 | 28.89 | 139 | 34.92 | 329 | 82.66 | 69 | 17.34 |
| 18. குருநாகல் | 208 | 43 | 20.67 | 56 | 26.92 | 62 | 29.81 | 38 | 18.27 | 199 | 95.67 | 9 | 4.33 |
| 19. புத்தளம் | 174 | 39 | 22.41 | 49 | 28.16 | 45 | 25.86 | 35 | 20.11 | 168 | 96.55 | 6 | 3.45 |
| 20. அனுராதபுரம் | 126 | 25 | 19.84 | 45 | 35.71 | 33 | 26.19 | 21 | 16.67 | 124 | 98.41 | 2 | 1.59 |
| 21. பொலன்னறுவை | 49 | 5 | 10.20 | 9 | 18.37 | 12 | 24.49 | 17 | 34.69 | 43 | 87.76 | 6 | 12.24 |
| 22. பதுளை | 339 | 25 | 7.37 | 70 | 20.65 | 112 | 33.04 | 116 | 34.22 | 323 | 95.28 | 16 | 4.72 |
| 23. மொனராகலை | 40 | 1 | 2.50 | 8 | 20.00 | 14 | 35.00 | 11 | 27.50 | 34 | 85.00 | 6 | 15.00 |
| 24. இரத்தினபுரி | 143 | 14 | 9.79 | 30 | 20.98 | 43 | 30.07 | 49 | 34.27 | 136 | 95.10 | 7 | 4.90 |
| 25. கேகாலை | 135 | 14 | 10.37 | 32 | 23.70 | 39 | 28.89 | 39 | 28.89 | 124 | 91.85 | 11 | 8.15 |
| **மொத்தம்** | **8398** | **737** | **8.78** | **1758** | **20.93** | **2447** | **29.14** | **2573** | **30.64** | **7515** | **89.49** | **883** | **10.51** |

**அட்டவணை 3**

## 1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 0 | 0.00 | 13822 | 100.00 |
| 81 - 90 | 49 | 0.35 | 13822 | 100.00 |
| 71 - 80 | 624 | 4.51 | 13773 | 99.65 |
| 61 - 70 | 2010 | 14.54 | 13149 | 95.13 |
| 51 - 60 | 3426 | 24.79 | 11139 | 80.59 |
| 41 - 50 | 3499 | 25.31 | 7713 | 55.80 |
| 31 - 40 | 2373 | 17.17 | 4214 | 30.49 |
| 21 - 30 | 1199 | 8.67 | 1841 | 13.32 |
| 11 - 20 | 502 | 3.63 | 642 | 4.64 |
| 01 - 10 | 120 | 0.87 | 140 | 1.01 |
| 00 - 00 | 20 | 0.14 | 20 | 0.14 |


**அட்டவணை 4**

**மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.**

**உதாரணம் :** (31 - 40 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையைக் கருதுவோம்.)
இப்பாடத்தில் 31 - 40 என்ற வீச்சினுள் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2373 ஆகும். இது 17.17% ஆகும். 40 அல்லது அதைவிடக் குறைவாகப் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 4214 ஆவதோடு அது 30.49% ஆகும்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாத்தாள் I இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம்.





இவ்வரைபுக்கமைய தகவல்களைப் பெறுவதற்கான உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது.

உதாரணம் - கட்டாய வினாக்களான 1 ஆம் 2 ஆம் வினாக்களிற்கு முறையே 99%, 94% ஆனவர்கள் துலங்கியுள்ளனர். பகுதி II இல் உள்ள தெரிவு வினாக்களில் 4 ஆம் வினாவினை 18% ஆனவர்களும் 6ஆம் வினாவினை 11% ஆனவர்களும் தெரிவுசெய்துள்ளனர்.

**வரைபு 2** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)


### 1.3.2 வினாத்தாள் I இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்





இங்கு 1 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 24 ஆகும். இவ்வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% என்ற வீச்சில் அதாவது 19-24 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் 4% ஆகவும் அதேபோன்று 24 புள்ளிகளில் 0%-25% என்ற வீச்சில் அதாவது 0 முதல் 6 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டோர் 21% ஆகவும் உள்ளனர்.

**வரைபு 3** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.3 வினாத்தாள் I - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு




## 1.3.4 வினாத்தாள் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்




இவ்வினாத்தாளின் பகுதி I இல் அடங்குகின்ற கட்டாய வினாக்களான முதல் மூன்று வினாக்களுக்கும் முறையே 99%, 96%, 97% ஆனோர் விடையளித்துள்ளனர். அத்தோடு பகுதி II இன் "அ" பிரிவு தெரிவுவினாக்களில் 4ஆம் வினாவுக்கு 76%ஆனோரும் 5ஆம் வினாவுக்கு 16% ஆனோரும் 6ஆம் வினாவுக்கு 07% ஆனோரும் விடையளித்துள்ளனர். அதேவேளை பகுதி II இன் "ஆ" பிரிவு தெரிவு வினாக்களில் 7ஆம் வினாவுக்கு 60% ஆனோரும் 8ஆம் வினாவுக்கு 31% ஆனோரும் விடையளித்துள்ளனர்.

**வரைபு 2** -(RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

## 1.3.5 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்





இங்கு முதலாம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 30 ஆகும். இவ்வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% என்ற வீச்சில் அதாவது 23 - 30 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டோர் 3% ஆவர். அத்தோடு 0% - 25% என்ற வீச்சில் அதாவது 0-8 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் 27% ஆவர்.

15புள்ளிகளைக் கொண்ட தெரிவு வினாவான 8ஆம் வினாவைத் தெரிவு செய்தோரில் 76%-100% என்ற வீச்சில் 3.5% ஆனோரும் 0%-25% என்ற வீச்சில் 54% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 2** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)


## 1.3.6 வினாத்தாள் II - வினா 1 (அ) பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு




வரைபு **4.1** : (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

உ-ம் : வினாத்தாள் II பகுதி I வினா 1 (அ) இல் 1.1 இன் இலகுச்சுட்டி 8.4 ஆகும். இதனால் கருதப்படுவது 84% ஆன பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு சரியாக துலங்கியுள்ளனர் என்பதாகும். இது அவ்வினாவின் இலகுதன்மை எனப்படுகிறது. இதன்படி ஆகக்குறைந்த இலகுதன்மையைக் கொண்ட வினா 1.19 ஆகும். அதன் இலகுதன்மை 13% ஆகும்.

1.3.7 வினாத்தாள் II பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு



## பாகம் II

## 2.0 வினாத்தாள்களுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள்

### 2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாத்தாள் I - கட்டமைப்பு

★ நேரம் 03 மணித்தியாலம் மொத்தம் 100 புள்ளிகள்

★ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I : 2 கட்டாய வினாக்களைக் கொண்டது.

பகுதி II : 6 வினாக்களில் எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

★ எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

## 2.1.2 வினாத்தாள் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள்

பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த வொருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே.

(அ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.

(ஆ) இதன்மூலம் விளங்கும் சங்ககால அகத்திணை இலக்கிய மரபினை எடுத்துக்காட்டுக.

(இ) தன் உள்ளக்கிடக்கையைக் குறிப்பால் வெளிப்படுத்தும் தலைவியின் மதிநுட்பத்தைத் துலக்குக.

(ii) சந்திரர் கோடி யென்னத் தரளவெண் கவிகை யோங்க
அந்தரத் தன்ன மெல்லா மார்த்தெனக் கவரி துன்ன
இந்திரற் குவமை சாலு மிருநிலக் கிழவ ரெல்லாம்
வந்தனர் மௌலி சூட்டு மண்டப மதனிற் புக்கார்.

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ஆ) இச்செய்யுளில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(இ) இச்செய்யுளின் வாயிலாக விளங்கிக்கொள்ளக் கிடப்பது யாது ? (24 புள்ளிகள்)

**வினா இலக்கம் 1**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(i) (அ) கரிய அடியினையுடைய வேப்பமரத்தின் ஒளிபொருந்திய பூவின் புதுவருவாய் (இளவேனிற்காலம்) எனது தலைவன் இல்லாத நிலையில் வீணே கழிந்துவிடுமோ? ஆற்றங்கரையிலே வளர்ந்திருக்கும், வெண்ணிறக் கிளைகளையுடைய அத்திமரத்தினின்றும் வீழ்ந்து, ஏழு நண்டுகளாற் சிதைக்கப்பட்ட ஒரு பழம்போல வருந்தும்படியாக கொடியவர்களது நாவானது காதலரது பிரிவு கண்டு கல்லென்ற ஓசை எழுமாறு அலர் தூற்றியது.

**(04 புள்ளிகள்)**

(அ)
- காதலுணர்வை வெளிப்படுத்தல்.
- பெயர்சுட்டாப் பண்பு
- முதல், கரு, உரி பொருத்தப்பாடு

  முதல் - முல்லைநிலம்

  கரு - வேம்பு, அத்திப்பழம், நண்டு

  உரி - இருத்தல்.
- கருத்து பாத்திரக்கூற்றாக வெளிப்படுத்தப்படல் (தலைவி கூற்று)
- ஏக்கமும் துயரமும் குறிப்பால் வெளிப்படுத்தப்படும் நுட்பம் **(04 புள்ளிகள்)**

(இ)
- பிரிந்து சென்ற தலைவன், வருவேனென்று சொல்லிச் சென்ற இளவேனிற்பருவம் வந்தும் அவன் வரக்காணாத ஏக்கத்தை குறிப்பால் உணர்த்தல்.
- அயலவர் அலர்தூற்றுவதால் தனக்கு ஏற்பட்ட துயரத்தை பொருத்தமான உவமை மூலம் உணர்த்தல்.

**(04 புள்ளிகள்)**

(ii) (அ) இராமனது முடிசூட்டு விழாவிற்கு வந்த மன்னர்கள் மண்டபத்திற்குள் புகுதல். **(04 புள்ளிகள்)**

(ஆ)
- சந்திரர் கோடி என்னத் தரளவெண் கவிகை

  உவமானம் - கோடிக்கணக்கான சந்திரர்கள்

  உவமேயம் - வெண்கொற்றக் குடைகள்

- அந்தரத்து அன்னம் எல்லாம் ஆர்த்தென கவரி

  உவமானம் - அந்தரத்து அன்னம்

  உவமேயம் - வெண்சாமரை

- இந்திரற்கு உவமைசாலும் இருநிலக்கிழவர்

  உவமானம் - இந்திரர்


  உவமேயம் - அரசர்கள் **(04 புள்ளிகள்)**

(இ)
- தசரதன் குலத்துப் பெருமை - இராமனது பெருமை
  - முடிசூட்டு விழாவைக் காண இத்தனை அரசர்கள் வந்தார்கள் என்பதன் மூலம்

**(04 புள்ளிகள்)**

**(12 + 12 = 24 புள்ளிகள்)**

**1 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**





வினாத்தாள் I பகுதி I இன் முதலாவது வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 24 ஆகும்.

இதில் 00 - 06 ஆயிடையில் 21%
07 - 12 ஆயிடையில் 57%
13 - 18 ஆயிடையில் 18%
19 - 24 ஆயிடையில் 4%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 13 அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளோர் 22% ஆனோர் ஆவர். பரீட்சார்த்திகளில் 78% ஆனவர்கள் வினாவுக்குரிய மொத்தப் புள்ளியில் அரைவாசிக்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினா இரண்டு பிரிவுகளையும் மும்மூன்று உபபிரிவுகளையும் கொண்டமைந்துள்ளது. முதலாவது பிரிவின் "(இ)" உபபிரிவினதும் இரண்டாவது பிரிவின் உபபிரிவுகள் மூன்றினதும் இலகுதன்மை குறைவாக காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

(i)
- செய்யுளின் பொருளை விளங்கி தெளிவாக எழுதியவர்கள் குறைவாகக் காணப்பட்டமை.
- 'உள்ளக் கிடக்கை' என்ற பதத்தை விளங்கிக் கொள்ளத் தவறியமை.

(ii)
- சந்தர்ப்பத்தைச் சரியாக இனங்காணாமை.
- உவமைகளைச் சரியாக இனங்காண முடியாமை. (சந்திரர் கோடி என்னத் தரள வெண்கவிதை)
- இனங்கண்டவர்களாலும் உவமைகளைச் சரியாக விளக்க முடியாமை.
- செய்யுளின் பொருள் விளங்காமையால் சரியாக விடையளிக்காமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

(i)
- செய்யுளின் பொருளை வசனநடையில் தெளிவாக எழுதப் பயிற்சியளித்தல்.
- சங்க கால இலக்கியப் பண்புகளை பாடல்களில் இனம்காண்பதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டல்.
- பாத்திரங்களின் மனநிலை அவற்றை வெளிப்படுத்தும் முறை என்பவற்றை பற்றி பாடல்களினூடாக எடுத்துக்காட்டுதல்.
- கவிஞர் செய்யுளில் கையாண்டுள்ள உத்திகள் பற்றி விளக்குதல்.

(ii)
- பாடப் பகுதி முழுவதையும் சம்பவ அடிப்படையில் வகைப்படுத்தி தெளிவாகக் கற்பித்தல்.
- அணிகளை இனங்காணவும், வகைப்படுத்தவும் நயக்கவும் மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்
- குறிப்பிட்ட செய்யுள் வலியுறுத்தும் விடயங்களை இனங்காண வழிகாட்டல்.
- பாடப்பரப்பிலுள்ள உள்ளடக்கம் நயத்தற்குரிய விடயங்கள் முதலானவற்றை மாணவர்கள் இனம்காணச் செய்தல்.

**வினா இலக்கம் - 02**

2. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) ஏன் கடலே இரைகின்றாய் ? இன்றுனக்கும்
சம்பளமா ? ஏழைவீட்டில்
தான்நீயும் பிறந்தனையா ? தமிழாநீ
கற்றதுவும் தகாதவார்த்தை!
தேன் கடலாய் ஓடுமெங்கள் திருநாட்டில்
பிறந்தபயன் தெரிகின் றாயோ ?
வான்தந்த வளமிலையோ ? வயல்தந்த
நிதி இலையோ ? வாடாதே நீ...
காற்செருப்புக் கழன்றதுவா ? கட்டுதற்கும்
இடமிலையா ? கால்நூற் றாண்டாய்த்
தோற்பொருத்தித் தோற்பொருத்தித் துணையாக
உழைத்த அவை தொழிலில் ஓய்ந்தால்
போற்றுதற்கோர் பொதுக்கூட்டம் போட்டதிலே
பொன்னாடை போர்த்து, மேலும்
பாற்சோறும் பட்சணமும் படைப்பதற்கு
நின்னிடத்தே பணமா இல்லை ?

'இபோசா' பஸ்களிலே ஏறுகையில்
வியர்வையினால், ஏழை தோழன்
யப்பானார் இறக்குகிற புறாமார்க்கு
மல்வேட்டி அடடா 'டப்டப்'
'சப்' பென்று மூச்சுவிட்டு சல்லடையாய்
மாறிற்றோ ? சனத்துக் குள்ளே
இப்படியும் அவமானம் ஏதேனும்
வந்ததுவா ? இரைகின் றாய் நீ!

சட்டம்பி ஆனவன்றே சந்தையிலே
வாங்கி வந்து, சலியா தின்று
பொட்டுதிப் போனாலும் புழுதிமிகப்
படிந்தாலும், போன மாதம்
கட்டறுந்த குடையினைஎம் கந்தோருக்
கெடுத்துப்போய், கவன மின்றிப்
பட்டணத்துக் கடைஎதிலும் பறிகொடுத்து
விட்டனையோ ? பதறுகின்றாய்!

கல்லூரி மாணவிஉன் மகள்கமலா
ஏதேனும் காசா கேட்டாள் ?
அல்லாஹ் போல், அனுதினமும் சில்லறைக்குக்
கடன்தந்த அலியார் நானா
பொல்லாத வார்த்தைஎதும் புகன்றாரோ ?
பொருமுகிறாய்! போன ஆண்டு
நில்வைக்கு வரிசையிலே நின்படலை
மட்டும் அங்கார் நிற்கின்றாரோ ?

அந்திபட்டும் இருசாமம் ஆச்சுதினிக்
கடன்காரர் ஆரும் அங்கே
இந்தவரை நில்லார்கள்; என்மனையாள்
மட்டுமங்கே இருப்பாள் ஏங்கி;
நொந்தென்ன கண்டோம்யாம் ? இல்லாமை
யாம்கொடிய நோயைப் போக்க
விந்தைமருந் தறியாமல் விதியென்று
பேசுகிறோம்! வீடு செல்வோம்.

(i) இக்கவிதையில் காற்செருப்பு, மல்வேட்டி, குடை என்பன ஆசிரியரின் வறுமையை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை விளக்குக.

(ii) ஆசிரியரின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துவதற்கு கடலின் இயற்கையான இரைச்சல் இக்கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ள முறையில் காணப்படும் சிறப்பினை விளக்குக.

(iii) 'கடன்காரர் ஆரும் அங்கே இந்தவரை நில்லார்கள்' என்ற தொடர் இக்கவிதையில் பெறும் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.

(iv) "இல்லாமையாம் கொடிய நோயைப் போக்க விந்தை மருந்தறியாமல் விதியென்று பேசுகிறோம்" என்று சொல்வதன் மூலம் கவிஞர் உணர்த்த விரும்பும் கருத்தைத் தெளிவுபடுத்துக.

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(அ) **(i)** காற்செருப்பு

- நீண்ட காலமாக தோல் பொருத்தித் தைத்துவந்தமையால் மேலும் கட்டுவதற்கு இடமின்றி இருந்தமை.
- புதிய செருப்பு வாங்குவதற்கும் வறுமை இடங்கொடாமை.

மல்வேட்டி

- பழைய வேட்டி, பஸ்ஸில் ஏறும்போது கிழிந்து சனத்துள் அவமானப்படுதல்.
- சல்லடையாகி, பயன்படுத்த முடியாத நிலையிலிருந்தமை. (டப்டப், சப்பென்று மூச்சு விட்டமை)
- புதிய வேட்டி வாங்க முடியாமை.

குடை

- ஆசிரியரான அன்றுமுதல் நீண்டகாலம் பயன்படுத்திக் கட்டறுந்த குடை.
- அதையும் கடையில் தவறவிட்ட அவலநிலை.
- ஆசிரியரின் வறுமையை மிகைப்படுத்திக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை.

**(04 புள்ளிகள்)**

**(ii)** கடலின் இயற்கையான இரைச்சலை ஆசிரியர் தன் உள்ளக் குமுறலுடன் இணைத்துப் பார்க்கிறார். தன்னைப்போல் கடலும் இரைகிறதா? எனக் கேட்கிறார்.

- வினாக்களைப் பயன்படுத்தியுள்ளார்.
  - ஏழை வீட்டில்தான் நீயும் பிறந்தனையா?
  - காற் செருப்பு கழன்றதுவா? போன்ற வினாக்கள்
- இரைகின்ற கடலை விளித்து உரையாடுதல்.
- தற்குறிப்பேற்ற உத்தி **(04 புள்ளிகள்)**

**(iii)** சம்பள நாளன்று கடன்காரர், வீட்டில் காத்திருப்பர். அவர்களைச் சந்திப்பதனை தவிர்ப்பதற்காக இரவில் வெகுநேரம் கழித்து வீட்டுக்குச் செல்லும் நிலையை உணர்த்துகிறது.

**(04 புள்ளிகள்)**

**(iv)** இல்லாமையைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்யாமல், அதனை விதியென்று எண்ணும் மனிதரின் ஊக்கமின்மையையும், மாற்றுவழியைத் தேடாமையையும் இது வெளிப்படுத்துகிறது.

**(04 புள்ளிகள்)**

(ஆ) "சாஸ்திரம் கெட்ட மூதேவி - ஆசாரமான குடும்பத்துப் பேரைக் கெடுத்த சனி - செத்துத் தொலைஞ்சுட்டானு தலையை முழுகித் தொலைன்னு சொல்றேன்" என்று பல்லைக் கடித்துக் கொண்டு கத்தினார் கணேசய்யர். பாட்டியம்மாள் ஒரு விநாடி தன்னையும் தன் எதிரே நிற்கும் மகனையும் வேறு யாரோபோல் விலகி நின்று பார்த்துவிட்டு, ஒரு கைத்த சிரிப்புடன் கூறினாள்:

"நம்ப சாஸ்திரம்... ஆச்சாரம்! அப்படின்னா நீ என்ன பண்ணியிருக்கணும் தெரியுமா ? என்னை என்ன பண்ணித்து தெரியுமா அந்த சாஸ்திரம் ?... அப்போ நீ பால் குடிக்கிற கொழந்தைடா... எனக்குப் பதினைஞ்சு வயசுடா! என் கொழந்தை, என் மொகத்தெப் பார்த்துப் பேயைப் பார்த்ததுபோல் அலறித்தேடா...! பெத்த தாய்கிட்டே பால் குடிக்க முடியாம, குழந்தை கத்துவே, கிட்டே வந்தா மொட்டையடிச்ச என்னைப் பார்த்து பயத்துலே அலறுவே... அப்படி என்னை, என் விதிக்கு மூலையிலே உட்காத்திவெச்சாளே! அந்தக் கோரத்தை நீ ஏன்டா பண்ணலே கீதாவுக்கு ?... ஏன் பண்ணலே சொல்லு ?" என்று கண்களில் கண்ணீர் வழியக் கேட்கும்போது, கணேசய்யரும் கண்களைப் பிழிந்துவிட்டுக் கொண்டார்! அவள் தொடர்ந்து பேசினாள்:

"ஏன்டாப்பா உன் சாஸ்திரம் அவளைக் கலர்புடவை கட்டிக்கச் சொல்லித்தோ ? தலையைப் பின்னிச் சுத்திண்டு பள்ளிக்கூடம் போய்வரச் சொல்லித்தோ ? தன் வயித்துக்குத் தானே சம்பாதிச்சுச் சாப்பிடச் சொல்லித்தோ ? இதுக்கெல்லாம் நீ உத்தரவு கேட்டப்போ நான் சரின்னேன், ஏன் ? காலம் மாறிண்டு வரது மனுஷாளும் மாறணும்னுதான்! நான் பொறந்த குடும்பத்திலேன்னு... சொல்றயே... எனக்கு நீ இருந்தே! வீடும் நெலமும் இருந்தது. அந்தக் காலமும் அப்படி இருந்தது. கீதா பண்ணின காரியத்தை மனசாலே கூட நெனைக்க முடியாத யுகம் அது. அப்போ அது சாத்தியமாவும் இருந்தது. இப்போ முடியலியேடா... எனக்கு உன் நிலைமையும் புரியறது. நீ பிள்ளையும் குட்டியுமாக வாழறவன்... அதுகளுக்கு நாளைக்கு நல்ல காரியங்கள் நடக்கணும்... எனக்குப் புரியறது - அவளும் புரிஞ்சுதானே எழுதி இருக்கா. உன் சாஸ்திரம் அவளை வாழவைக்குமாடா ? அவளுக்கு அது வேண்டாம்னுட்டா. ஆனா டேய் கணேசா... என்னை மன்னிச்சுக்கோடா... எனக்கு அவ வேணும்! அவதான்டா வேணும். எனக்கும் இனிமே என்ன வேண்டி இருக்கு! என் சாஸ்திரம் என்னோடயே இருந்து இந்தக் கட்டையோடே எரியும். அதனாலே நீங்க நன்னா இருங்கோ - நான் கீதாவோடேயே போயிடறேன்... அதுதான் நல்லது. அதுக்காக நீ உள்ளூரத் திருப்திப் படலாம்... யோசிச்சுப்பாரு, இல்லேன்னா அவளோட சேத்து எனக்கும் ஒரு முழுக்குப் போட்டுடு! நான் வரேன்" என்று கூறியவாறே மாற்றுப் புடவையைச் சுருட்டிக் காக்கிப் பைக்குள் திணித்தவாறு எழுந்தாள் பாட்டியம்மாள்.

(i) சாஸ்திரத்தின் பெயரால் இளம் வயதில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை பாட்டியம்மாள் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துமாற்றை விளக்குக.

(ii) "அந்தக் கோரத்தை நீ ஏன்டா பண்ணலே கீதாவுக்கு" என்ற தன் கேள்விக்குப் பாட்டி கூறும் விடையின் மூலம் யுகமாற்றம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது என்பதை விளக்குக.

(iii) சாஸ்திரத்தை நிராகரிப்பதற்கு பாட்டியைத் தூண்டிய காரணங்கள் என நீர் கருதுவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(iv) ஆசிரியர் பயன்படுத்தும் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குக. (16 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(ஆ)(i) - சாஸ்திரத்தின் பெயரால் இளம்வயதில் திருமணம் செய்வித்தல்.

- கணவனை இழந்த பெண்ணுக்கு மொட்டையடித்தல்.
- வீட்டினுள்ளேயே அவளை முடக்குதல்.
- கலர்ப்புடைவை கட்ட முடியாமை.
- தானே சம்பாதிக்க முடியாத நிலை
- மறுமணம் மறுக்கப்பட்டமை.

**(04 புள்ளிகள்)**

**(ii)**

- கலர்ப்புடைவை கட்டுதல்.
- தலைபின்னுதல் (மொட்டையடிக்கப்படாமை)
- தானே உழைத்துச் சம்பாதித்தல்
- மறுமணத்திற்கான அனுமதி
- கால மாற்றத்துக்கேற்ப மனிதர்களும் மாற வேண்டும் என்பதை அங்கீகரித்தல்.

**(04 புள்ளிகள்)**

**(iii)**

- அவளது வாழ்க்கை அனுபவம்
  ( மொட்டையடிக்கப்பட்டமையைக் கண்டு பயந்த குழந்தை பால்குடிக்க மறுத்து அழுதல்.)
- தான் அனுபவித்த துன்பங்களை ஏனைய பெண்கள் அனுபவிக்கக் கூடாது என்ற மன வைராக்கியம்
- தன்னுடனேயே இச் சாஸ்திரம் அழியட்டும் என்ற உறுதி.
- யுக - கால மாற்றத்தை ஏற்க வேண்டியிருந்தமை.
- சாஸ்திரங்கள் நடைமுறைக்கு உதவாதனவாக இருத்தலை உணர்ந்தமை.

**(04 புள்ளிகள்)**


**(iv)**

- பிராமணப் பேச்சுத் தமிழ் பாத்திரங்களுக்கேற்ப உயிரோட்டமுள்ளதாய்க் கையாளப்படுதல்.
- வினாக்களை எழுப்பி பதிலளிப்பதன் மூலம் கருத்துக்களை வலியுறுத்துதல்.
- உணர்ச்சியை வெளிப்படுத்தக்கூடிய மொழிநடை
- வாசகர்களை ஈர்க்கக்கூடிய மொழிநடை

**(04 புள்ளிகள்)**


**(4 x 4 = 16 புள்ளிகள்)**

**2 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இந்த வினா இரண்டு தெரிவுகளைக் கொண்ட கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 16 ஆகும்.
இதில் 00 - 04 ஆயிடையில் 15%
05 - 08 ஆயிடையில் 37%
09 - 12 ஆயிடையில் 38%
13 - 16 ஆயிடையில் 10%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 48% ஆனோர் அரைவாசிப் புள்ளியிலும் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் கவிதைப் பகுதியை அல்லது உரைநடைப் பகுதியைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும்.

கவிதைப் பகுதியும், உரைநடைப் பகுதியும் இலகுதன்மையில் சமனாகக் காணப்படுகின்றது. கவிதைப் பகுதி (அ) யில் வினா (ii) இலகுதன்மை கூடியதாகவும் (56%) வினா (iv) இலகுதன்மை குறைந்ததாகவும் (35%) காணப்படுகின்றது. உரைநடைப் பகுதியில் வினா (ii) இலகுதன்மை கூடியதாகவும் வினா (iii) இலகுதன்மை குறைந்ததாகவும் (40%) காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

**கவிதைப்பகுதி :**

- கவிஞரது விபரிப்புக்களின் தாற்பரியத்தை விளங்கிக் கொள்ளாமை.
- கடலின் குமுறலுக்கும் ஆசிரியரின் உள்ளக்குமுறலுக்கும் இடையிலான இயைபினை விளங்கிக் கொள்ளாமை.
- வினாக்கள் (iii), (iv) ஆகியவற்றில் பரீட்சார்த்திகள் ஊகித்து உணரவேண்டியவற்றை உணர்ந்துகொள்ளத் தவறியமை.

**உரைநடைப்பகுதி :**

- வினாக்கள் (i), (ii) ஆகியவற்றுக்கான விடைகள் பந்தியில் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்து எழுதத் தவறியமை.
- வினா (iii) இற்கு விடையாக பாட்டியின் வாழ்க்கை அனுபவங்களைக் குறிப்பிட்ட பரீட்சார்த்திகள் ஏனைய காரணங்களைக் குறிப்பிடத் தவறியமை.
- ஆசிரியர் பயன்படுத்திய மொழிநடை பற்றிக் கூறும்போது பிராமணப் பேச்சுத்தமிழ் என்பதை மாத்திரம் குறிப்பிட்டார்களேயன்றி ஏனைய விடயங்களைக் கூறவில்லை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

**கவிதைப்பகுதி :**

- கவிதைப் பகுதியில் குறிப்புப்பொருளாகக் கூறப்பட்டவற்றை ஊகித்து விடையளிக்கும் திறனைப் பெறுவதற்குப் பயிற்சியளித்தல்.
- கவிதையில் இடம்பெறும் சம்பவ விபரிப்பு கவிஞரால் முன்வைக்கப்படும் முறையினை அறிந்து விபரிக்க வழிகாட்டல்.
- கவிதையை சுயமாகப் படித்து விளங்கிக்கொள்வதற்கு குறித்த கவிதை தொடர்பான வினாக்களை எழுப்பி அவற்றுக்கு விடையெழுதச் செய்வதனூடாகப் பயிற்சி வழங்கல்.

**உரைநடைப்பகுதி :**

- பாடப்பகுதிகளாகத் தரப்பட்டுள்ள சிறுகதை, கட்டுரை முதலானவற்றிலிருந்து பொருத்தமான பகுதிகளைத் தெரிவு செய்து வழங்கி அவற்றை நுணுக்கமாகப் பகுத்தாராய்ந்து நயக்க வழிகாட்டுதல்.
- தரப்படும் உரைப் பகுதியொன்றின் மையப்பொருள் உத்திகள், மொழிநடை முதலானவை பற்றி விளக்கமளித்து பயிற்சிகள் வழங்குதல்.

## பகுதி II

3. அவை அஞ்சாமை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு,

(அ) அவை அஞ்சாரது சிறப்பும்

(ஆ) அவை அஞ்சுவாரது இழிவும்

வலியுறுத்தப்பட்டிருக்குமாற்றினையும்

(இ) அவ்வதிகாரத்தில் இடம்பெறும் உவமைகள் எதனை உணர்த்தக் கையாளப்பட்டுள்ளன என்பதையும்

(ஈ) அவையஞ்சாமை, செலச்சொல்லல் ஆகிய சொற்றொடர்கள் மூலம் விளங்கிக் கொள்ளக்கூடியவை யாவை என்பதையும்

தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ)
- சொல்லின் தொகையறிந்த தூய்மையவர் வல்லமையுள்ள சபையில் அச்சம் காரணமாக, தாம் சொல்லக் கருதியதை வாய் தவறியும் வழுப்படச் சொல்லார்.
- கற்றவர் சபையிலே அஞ்சாது அவர் மனங்கொள்ளுமாறு சொல்ல வல்லவர், கற்றோர் யாவருள்ளும் கற்றவராகப் பாராட்டப்படுவார்.
- கற்றவர் குழாத்திடைச் சென்று அஞ்சாது பேசுதல், பகைவர் குழாத்திடையிற் புகுந்து அஞ்சாது போர் செய்து இறத்தலிலும் அரியது.

**(06 புள்ளிகள்)**

(ஆ)
- போர்முனையில் அஞ்சாத வீரர்க்கே வாட்படை பயன்படுவது போல், மதிநுட்பம் உடையார் சபையிலே அஞ்சாது பேச வல்லார்க்கே கற்றவை பயன்படும்.
- அவையிடத்து அஞ்சுபவன் படித்த நூல், பகையிடத்து அஞ்சுகிற பேடி பிடித்த கூர்வாள் போன்றது.
- அறிந்தவர் முன்னிலையில், அவர்கள் மனங்கொள்ளுமாறு சொல்லமுடியாதவன் கற்ற கல்வியால் எந்தப் பயனும் இல்லை.
- நூல்களைக் கற்றறிந்தபோதிலும் அவைக்கு அஞ்சுபவர், கல்லாதவரிலும் கீழானவர்.
- கற்றார் அவையில் கேட்பவர் மனங்கொள்ளுமாறு பேசமாட்டாதவர், உயிரோடு இருப்பினும் இறந்தவருக்கு ஒப்பானவர்.

**(06 புள்ளிகள்)**

(இ) அவையஞ்சாமையின் இன்றியமையாமையினை வலியுறுத்துவதற்காக **(04 புள்ளிகள்)**

(ஈ)
- அவையஞ்சாமை

  அவையை அறிந்தபின் அச்சபைமுன் தான் சொல்லக் கருதியதைச் சொல்ல அஞ்சாமை.


- செலச்சொல்லல்

  கேட்பவர் மனங்கொள்ளுமாறும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலும் (வினைத்திறனுடையதாகச்) சொல்லல்

**(04 புள்ளிகள்)**


**(6 + 6 + 4 + 4 = 20 புள்ளிகள்)**

**3 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவுவினாவாக அமைந்துள்ளது. வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 14%
06 - 10 ஆயிடையில் 30%
11 - 15 ஆயிடையில் 45%
16 - 20 ஆயிடையில் 11%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 56% ஆனோர் அரைவாசிப் புள்ளிகளிலும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா நான்கு பிரிவுகளைக் கொண்டது. (அ), (ஆ) பிரிவுகள் (60%) இலகுதன்மை கூடியனவாகவும் (இ), (ஈ) பிரிவுகள் இலகுதன்மை குறைந்தனவாகவும் (32%, 38%) காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- விடயத்தை வகைப்படுத்தி எழுதியுள்ளனர்.
- கையாளப்பட்ட உவமைகளின் நோக்கத்தை விளங்கிக்கொள்ளாமை.
- சொற்றொடர்களின் பொருளைச் சுட்டிப்பாக அறியாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, பொருத்தப்பாடு என்பவற்றை விளங்கிக்கொள்ளச் செய்தல்.
- அத்தோடு அந்த உவமை கையாளப்பட்டதன் நோக்கத்தையும் உணரச்செய்தல்.
- குறள்களில் அமைந்துள்ள முக்கியமான சொற்கள், தொடர்களின் பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ள வழிப்படுத்தல்.

4. **கைகேயி சூழ்வினைப் படலத்தில்** திருமுடி சூட்டுவதற்கெனச் சுமந்திரனால் தேரில் அழைத்துச் செல்லப்பட்ட இராமன் தசரதன் அரண்மனையை அடைந்தது முதல் காட்டுக்குச் செல்லக் கைகேயியிடம் விடைபெற்றது வரையுள்ள பகுதியில், மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கு** கம்பராலே சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றினைத் துலக்குக.

(அ) இராமன் வீதிவழிச் சென்று தசரதன் அரண்மனையுள் நுழைந்ததும் அங்கு அவனைத் தேடிக் காணாமையும்

(ஆ) இராமன் கைகேயியின் அரண்மனையுட் புகுந்ததும் அவள் இராமன்முன் தோன்றியமையும்

(இ) இராமன் கைகேயியை வணங்கிப் பணிந்து நின்றதும் மன்னவன் பணியொன்று உளதென்று அவள் கூறியதும் அதனைப் பணிக்குமாறு இராமன் கேட்டதும்

(ஈ) கைகேயி உரைகேட்ட இராமன் நிலையும் அவளிடம் அவன் விடைபெற்றவாறும்

(உ) இராமனது மனோன்னதம்

(ஊ) கைகேயி கொடுமை (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) • மக்களெல்லாம் பலவாறு புகழ்ந்து பேச, வலிமைமிக்க வீரனாகிய இராமன் விரைந்தோடும் குதிரைகள் பூட்டப்பெற்ற அழகுமிக்க தேரில், நீண்ட கொடிகளால் அலங்கரிக்கப்பெற்ற வீதிமுழுவதும் பொலிவுறும்படியாகச் சென்றான்.

- புகழையே ஆபரணமாகப் பூண்ட தசரத மன்னன் வீற்றிருக்கும் அரண்மனையுட் புகுந்தான்.
- அங்கே, ஆசையோடு கவரி வீசவும், மனைவியர் புதிய மகிழ்ச்சியோடு விளங்கவும், அவர்கள்மேல் அன்பு பாராட்டி அரியாசனத்திலே மகுடம் சூடிய கோலத்தில் பெரு மகிழ்ச்சியோடு வீற்றிருப்பான் என்று எதிர்பார்த்துச் சென்ற தசரதனைக் காணாது பலத்த ஏமாற்றத்திற்கு ஆளானான்.

(ஆ) • இராமன் கள்ளமில்லா உள்ளத்தோடு, தாய் என்ற உணர்வோடு, சிற்றன்னையாகிய கைகேயியின் அரண்மனையுட் புகுந்தான்.

- ஆனால் அவளோ யமனைப்போல, தசரதனோடல்லாது தனியளாய் இராமன்முன் வந்தாள். (இராமனதும் கைகேயியினதும் முரண்பட்ட நிலை)

(இ) • இராமன் தனது தலை நிலத்தில் படும்படியாக கைகேயியை வணங்கி, வாய்பொத்தி, ஆடையை ஒதுக்கி மிகப் பணிந்து நின்றான்.
அப்போது கைகேயி, இராமனை நோக்கி,
"உன் தந்தை உனக்கு இட்ட கட்டளையொன்று உண்டு, அதை நானே சொல்லலாம் என்றால் சொல்வேன்" என்றாள்.
உடனே இராமன், வஞ்சகமின்றி, "என் தந்தையின் கட்டளையை தங்கள் வாயால் உரைப்பதாயின் அதைவிட எனக்கு வேறு என்ன பேறு உள்ளது" என்று மகிழ்ந்து, அதனைப் பணிக்குமாறு வேண்டினான்.

(ஈ) • கைகேயி, தசரதனது கட்டளை என்று சொன்ன விடயங்களைக் கேட்ட இராமன், வண்டியினின்றும் அவிழ்த்து விடப்பட்ட மாடுபோல விடுதலை பெற்ற மகிழ்ச்சியோடு, "மன்னவன் கட்டளை அன்று, தங்களுடைய கட்டளையேயாயினும் நான் அதை மறுப்பேனா? என் தம்பி பெற்ற செல்வம் நான் பெற்ற செல்வமே. தங்கள் கட்டளையைத் தலைமேற்கொண்டவனாய் இன்றே கானகம் செல்கிறேன் என்று விடைபெற்றான்.

(உ)


- அடல் வீரன்
- வீதி பொலியும்படி போனவன்
- தாய் தந்தையர் கட்டளை எதுவாயினும் பணிந்தேற்கும் தன்மை
- ஞானியர் உள்ளத்தில் உள்ளியவாறு தோன்றுபவன்
- பணிந்த நடத்தையும், பேச்சும் உடையவன்.
- தனக்கு எதுவரினும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம்.
- தனக்கு வந்த செல்வத்தைப் பாரமாகவும் செல்வ நீக்கத்தை விடுதலையாகவும் கருதும் பற்றற்ற தன்மை
- தனது தம்பிக்கு வரும் செல்வத்தைத் தனது செல்வமாகக் கருதும் பெருந்தன்மை

(ஊ)

- தாயென நினைவான் முன்னே கூற்றென வருதல்
- தசரதனைத் தேடி வந்தவனிடம் தமியளாய் வருதல்
- இரும்பினால் இயன்ற நெஞ்சினள்
- கூற்றம் என்னும் பெயரின்றிக் கொடுமை பூண்டாள்
- பேராசையும், வஞ்சகமும் உடையவள்


( எவையேனும் நான்கிற்கு ) **(5 × 4 = 20 புள்ளிகள்)**

**4 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவு வினாவாக அமைந்துள்ளது. இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 53%
06 - 10 ஆயிடையில் 26%
11 - 15 ஆயிடையில் 15%
16 - 20 ஆயிடையில் 6%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 79% ஆனோர் அரைவாசிப் புள்ளியிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 21% ஆனோர் மாத்திரம் அரைவாசிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 6 பிரிவுளைக் கொண்டது. அவற்றுள் எவையேனும் நான்கிற்கு விடையளிக்க வேண்டும். ஒப்பீட்டளவில் (இ) பிரிவு தவிர்ந்த ஏனைய ஐந்து பிரிவுகளும் இலகுதன்மை குறைவானவையாகவே காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினாவின் வரையறைக்குள் நின்று விடையளிக்கத் தவறியமை.
- சம்பவ நகர்வுகளை தெளிவாக அறிந்துகொள்ளாமை.
- பாத்திரங்களின் குணாம்சங்களைத் தெளிவாக அறிந்துகொள்ளாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் சுயமாகவே செய்யுளின் பொருளை விளங்கிக்கொள்ளத்தக்க திறனை வளர்த்தல்.
- கதையோட்டத்துடன் தொடர்புபடுத்திச் செய்யுள்களைப் பகுத்தும் தொகுத்தும் நோக்கும் திறனை வளர்த்தல்.
- சம்பவத் தொடர்புகளைத் தெளிவுறுத்தல்.
- பாத்திரக் குணாம்சங்களை அறியச் செய்தல்.

5. சீறாப்புராணம் **மழை அழைப்பித்த படலத்தை** அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) மழையின்மையால் ஏற்பட்ட வரட்சியின் விளைவுகள்

(ஆ) தொடர்ச்சியாகப் பெருமழை பெய்தமையால் ஏற்பட்ட துன்பம்

(இ) பெருமானார் முகமது நபி (ஸல்) அவர்களின் பெருமை

(ஈ) எவையேனும் **இரண்டு** உவமைகளின் சிறப்பு (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) வரட்சியின் விளைவுகள்

- எங்கும் நீர் வற்றி சோலைகளில் மரங்களிலிருந்து இலைகள் உதிர்ந்தமை.
- எங்கும் பசுமையிழந்த நிலை
- கானல் நீர்க் காட்சி.
- பெண்களின் முலைப்பால் வற்றியமை
- தவம், தருமம், இரக்கம் என்பன அகன்று சிறுமைச் செயல்கள் அதிகரித்தமை.
- விருந்தோம்பலின்மை
- எருமைகளும், பசுக்களும் பால் வரண்டு துன்புற்றமை. அதனால் கன்றுகள் இறந்தமை.
- பறவைகள் மயங்கி காடுகளை அடைந்தமை நாவுலர்ந்து வாடியமை.
- மருத நிலமும் பாலைவனமாக மாறியமை.
- பெண்கள் வனப்பும் கற்புமிழந்தமை
- பரந்த உலகமும் மெலிவடைந்தமை
- மக்களில் சிலர் எலும்புருவினோடு மாய்ந்தமை பஞ்சகாலம் தோன்றியதே என்று காடுகளில் அலைந்தமை.

**(6 புள்ளிகள்)**

(ஆ) பெருமழையால் ஏற்பட்ட துன்பம்

- வாய்க்கால் அணைகள் உடைந்தமை.
- குறிஞ்சி முதலான ஐவகை நிலத்தினதும் வளங்கள் அடித்துச் செல்லப்பட்டமை.
- வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் உணவு சமைத்து உண்ண முடியாமல் சிறுவர்கள் பசியினாற் கதறியமை.
- குளிரால் அனைவரும் நடுங்கியமை.
- ஆடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டமை.
- பசுக்கள் இறந்தமை. **(6 புள்ளிகள்)**

(இ) - மக்களின் துன்பத்தை நீக்குவதற்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்யும் கருணை மிக்கவர்.

- அவரது பிரார்த்தனை இறைவனால் கேட்கப்பட்டு நிறைவேற்றப்படக்கூடிய பெருமையுடையவர்
- பாம்பினை வரவழைத்துப் பேசியவர்.
- ஒப்பில்லாத தூதர்
- கீர்த்தி மிகு வள்ளல்.
- தருமம் முதலான நற்பண்புகளின் உருவமாயுள்ளவர். **(4 புள்ளிகள்)**

(ஈ) - தலைப்பிள்ளை பெறுவதற்காகத் தாய்வீடு சென்ற மகள்போல மேகம் மின்னலோடும் இடியோடும் மழைநீரைச் சொரிந்தது. (தலைமகவளிக்க தாய்மனைக்குற்ற தனயள்)


- ஆண்மகவைப் பிரசவித்தது போல்
  மழைப்பொழிவு மக்களை மகிழ்வித்தமை.
- குளிர்ந்த சந்திரனைப் போல இரக்கமுள்ளவர். (பனிமதிக் கருணை)
- புவியிலுள்ள உயிரினம் அனைத்தும் தருமமும் நெறியும் தவறாத தீனர் குலம் போலத் தழைத்தமை.
- புதையல் கிடைத்த வறியோர் அதனைத் தமது மனையில் புதைத்து மகிழ்வதைப் போல, பூமியில் உள்ளவர் மகிழுமாறு மழை பொழிந்தமை.

(எவையேனும் இரண்டு)


**(4 புள்ளிகள்)**

**(6 + 6 + 4 + 4 = 20 புள்ளிகள்)**

**5 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 10%
06 - 10 ஆயிடையில் 21%
11 - 15 ஆயிடையில் 39%
16 - 20 ஆயிடையில் 30%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் 4 பிரிவுகளில் (அ), (ஆ), (இ) ஆகியன இலகுதன்மை கூடியவையாகவும் பிரிவு (ஈ) ஒப்பீட்டளவில் இலகுதன்மை குறைந்ததாகவும் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வரட்சியால் ஏற்பட்ட விளைவுகளையும் பெருமழையால் விளைந்த துன்பத்தையும் வேறு பிரித்து அறியாது விடையளித்தமை.
- உவமைகளின் சிறப்பினை எடுத்துக்காட்டாது உவமைகளை மாத்திரம் எழுதியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- குறித்த பாடப் பகுதியை பகுத்தும் தொகுத்தும் நோக்கும் திறனை விருத்தி செய்தல்.
- பாடப்பரப்பில் இடம்பெற்றுள்ள உவமைகளின் பொருத்தப்பாடு, உவமைகளைக் கையாண்டதால் உண்டான பொருள் விளக்கம் என்பவற்றை எடுத்துக்காட்டுவதன் மூலம் மாணவர்களுக்கு உவமை அணி பற்றிய தெளிவினை ஏற்படுத்தல்.

6. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் **விஞ்ஞானமும் அகராதியும்** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) அமெரிக்க மிசனரியினரின் கல்விப் பணி

(ஆ) அறிவியல் தமிழ்

(இ) அகராதித்துறை

ஆகியவை ஈழத்தில் வளர்ந்தவாற்றை விபரிக்குக. (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) அமெரிக்க மிசனரியினரின் கல்விப் பணி

- கல்விக்கூடங்களை நிறுவுதல் (1823 - வட்டுக்கோட்டைக் கல்லூரி)
- ஆங்கில, தமிழ்மொழி மூலமான கற்பித்தலுக்கு முக்கியத்துவமளித்தல்.
- அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கான கல்வியை ஊக்குவித்தல்.

**(6 புள்ளிகள்)**

(ஆ) அறிவியல் தமிழ்

- கிறீன் பாதிரியாரின், மருத்துவ நூல்களின் மொழிபெயர்ப்பு முயற்சிகள்
- மருத்துவ நூல்களின் மொழிபெயர்ப்பு முயற்சியில் மாணவர்களை ஊக்குவித்தல்.
- மொழிபெயர்ப்புகள்

| | |
|---|---|
| இரணவைத்தியம் | - இடான்போர்த்து |
| அங்காதிபாதம் | - டி. டபிள்யு சாப்மன் |
| வைத்தியாகரம் | - வில்லியம் போல் |
| கெமிஸ்தம் | - எஸ். சாமிநாதன், டி.டபிள்யு சாப்மன் |
| மனுவிசுகரணம், இந்துபதார்த்த சாரம் | - சாப்மன் |
| வீச கணிதம் | - கறோல் விஸ்வநாதபிள்ளை |

**(7 புள்ளிகள்)**

(இ) அகராதித் துறை


| | |
|---|---|
| - யாழ்ப்பாண அகராதி / மானிப்பாய் அகராதி | - வண. எஸ். ஸ்போல்டிங் |
| - வின்ஸ்லோ அகராதி | - வண. எம். வின்ஸ்லோ |
| - சங்க அகராதி | - நா. கதிரைவேற்பிள்ளை |
| - இலக்கியச் சொல்லகராதி | - சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் |
| - ஆங்கிலத்தமிழ் அகராதி | - முத்துத்தம்பிப்பிள்ளை |
| - சொற்பிறப்பு அகராதி | - வண. சுவாமி ஞானப்பிரகாசர் |
| - சொற்பொருள் விளக்கம் | - சி.சுப்பிரமணிய சாஸ்திரியார். |

தமிழகத்தில் அறிவியல் தமிழ் நூல்களும் அகராதிகளும் உருவாவதற்கு முன்பே இலங்கையில் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**(7 புள்ளிகள்)**

**(6 + 7 + 7 = 20 புள்ளிகள்)**


**6 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவு வினாவாகும். மொத்தப்புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 30%
06 - 10 ஆயிடையில் 35%
11 - 15 ஆயிடையில் 25%
16 - 20 ஆயிடையில் 10%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 3 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இம்மூன்று பிரிவுகளும் இலகுதன்மை குறைந்தவையாகக் காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கட்டுரைப் பகுதி முழுவதையும் நினைவுக்கு உட்படுத்தி விடையெழுதத் தவறியமை.
- ஈழத்தில் அமெரிக்க மிசனரியினரால் கல்வி, அறிவியல் தமிழ் மற்றும் அகராதித் துறை ஆகியவை வளர்ந்தவாறு பற்றி எழுதுகையில், விடைகளுக்குரிய ஆதாரங்களைக் குறிப்பிட்டு எழுதாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- கட்டுரையிற் கூறப்பட்டுள்ள பல்வேறு விடயங்களையும் இனங்கண்டு வகுத்தும் தொகுத்தும் எழுதுவதற்குப் பயிற்சியளித்தல்.
- கட்டுரையாசிரியரின் நோக்கம் பற்றித் தெளிவுறுத்தல்.

7. **ஒரு கூடைக்கொழுந்து** சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு,

(அ) தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர் எளிதாகப் பாதிப்புக்குள்ளாகக் கூடிய நிலையில் உள்ளமை

(ஆ) இலட்சுமியின் தற்றுணிவு

(இ) கணக்கப்பிள்ளை, கங்காணி ஆகிய பாத்திரங்களின் உருவாக்கம்

(ஈ) ஆறுமுகம், இலட்சுமி ஆகியோருக்கிடையே உள்ள உறவு

ஆகியவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) தேயிலைத்தோட்டப் பெண் தொழிலாளர் எளிதாகப் பாதிப்புக்குள்ளாகக் கூடிய நிலையில் உள்ளமை.

- கங்காணி, கணக்குப்பிள்ளை ஆகியோரின் கெடுபிடிகளுக்கு உள்ளாதல்.
- உண்மையான உழைப்புக்கு மதிப்பளிக்காமை.
- நேர்மையான செயற்பாடுகளையும் சந்தேகக் கண்கொண்டு நோக்குதல்.
- பெண் தொழிலாளர்கள் அதிகாரத்திலிருப்பவர்களின் விருப்புகளுக்கு இசைந்துகொடுக்க வேண்டிய நிலை.

**(5 புள்ளிகள்)**

(ஆ) இலட்சுமியின் தற்றுணிவு

- மீண்டும் ஐம்பத்தேழு இறாத்தல் கொழுந்து பறிக்க முடியுமா? எனக் கணக்கப்பிள்ளை கேட்டபோது அதனைச் சவாலாக ஏற்றுக்கொள்ளல்.
  "யாரு முடியாதுன்னா? என்னாலே எடுக்க முடியும் எடுத்துக் காட்றேன்"
- இலட்சுமியின் எதிர்காலக் கணவன் ஆறுமுகம் உதவி செய்கிறேன் என்ற போதும் அதனை மறுத்தல்.
- கூறியதற்கு அதிகமாகக் கொழுந்து எடுத்து நிரூபித்தல்.

**(5 புள்ளிகள்)**

(இ) கணக்கப்பிள்ளை

- அதிகாரத்தோரணை ("அவர் அரைந்து வந்து நின்ற தோரணையும், ஆட்களைப் பார்த்த விதமும், ஏதோ தவறுதலாகக் கருப்பாகப் பிறந்துவிட்ட வெள்ளைக்காரனைப்போல் இருந்தது.")
- தொழிலாளரை ஏளனமாக எண்ணுதல்.
  (அதுகள், லேபர் கூட்டந்தானே, என்ன தெரியும் அந்தக் கண்டறிகளுக்கு?..)
  ("ஆட்கள் எல்லோரையும் அலட்சியத்துடன் ஒருமுறை பார்த்தார் ஐயா")
- நேர்மையானவராகத் தன்னைக் காட்டுதல்
  (இலட்சுமி மீது ஏன் நடவடிக்கை எடுத்தார் என்பதற்காக அவர் கூறும் நியாயங்கள்.)
- நியாயத்துக்கு கட்டுப்படுதல்.
  (இலட்சுமி கிள்ளிய கொழுந்தில் பழுது இருந்தபோதும் கங்காணி தந்த விளக்கத்தைப் புரிந்து கொண்டு நிறையைப் பதிவு செய்தல்)

கங்காணி

- அதிகாரத்துக்குப் பணிவாகத் துணைபோதல்
  ( கணக்கப்பிள்ளைக்கு முன்னால் கூனிக்குறுகி நிற்றல்.)
- தொழிலாளரின் நலனில் அக்கறை கொள்ளல்.
  ( வெளிப்படையாக விரட்டினாலும் அவர்கள்மீது கரிசனை கொள்ளல் )
- நியாயத்திற்காகத் துணிந்து குரல் கொடுத்தல் **(6 புள்ளிகள்)**


(ஈ) ஆறுமுகம், இலட்சுமி ஆகியோருக்கிடையே உள்ள உறவு

- இலட்சுமியின் எதிர்காலக் கணவன்
- அவளுக்குக் கொழுந்து கிள்ளுவதில் உதவி செய்தல்
- இடர்வரும் வேளைகளில் உதவி செய்ய விரும்புதல்
- காதல் உறவை நாகரிகமாகப் பேணுதல்.

**(4 புள்ளிகள்)**


**(5 + 5 + 6 + 4 = 20 புள்ளிகள்)**

**7 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 27%
06 - 10 ஆயிடையில் 43%
11 - 15 ஆயிடையில் 27%
16 - 20 ஆயிடையில் 3%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வரைபின்படி 50% க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் 30% இனரே.




இவ்வினா நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. (அ), (இ) பிரிவுகள் இலகுதன்மை குறைந்தனவாகக் காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினாவுக்கு ஏற்ற வகையில் விடையளிக்காமல் கதையையே எழுதியிருந்தமை.
- தற்றுணிவு என்ற சொல்லின் பொருளைத் தெளிவாக அறியாததனால் சரியாக விடையெழுதாமை.
- கதையோட்டத்திற்கு குறித்த பாத்திரங்கள் உதவும் பாங்கினை வெளிப்படுத்தாது பாத்திரங்களின் குணவியல்புகளை மாத்திரமே எழுதியிருந்தமை.
- ஆறுமுகம், இலட்சுமி ஆகியோருக்கிடையிலான உறவின் தாற்பரியத்தைச் சரியாக வெளிப்படுத்தாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- கதையை மாணவர்களே சுயமாக வாசித்து விளங்கிக்கொள்ளச் செய்தல்.
- கதைக்கரு, கதையை வளர்த்துச்செல்லும் பாங்கு, பாத்திரங்களின் வகிபாகம் எனப் பலவித கோணங்களில் நோக்குவதற்குப் பயிற்சியளித்தல்.
- பாத்திரங்களுக்கிடையிலான ஊடாட்டம் அமைந்தவாறும் அது கதையை வளர்த்துச்செல்ல உதவுகின்றவாறும் குறித்துக் கலந்துரையாடுதல்.
- கடினமான புனைவுச் சொற்களுக்கான விளக்கத்தை கதையுடன் தொடர்புபடுத்திக் கூறுதல்.

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **மணிமேகலை** செய்யுட் பகுதியில் கூறப்படும் அறப்போதனை

(ஆ) **வெண்ணெயளைந்த...** என்னும் பதிகத்தில், பெரியாழ்வார் கண்ணன்மேல் கொண்ட ஈடுபாடு

(இ) மு. வரதராசனின் **மனவலிமை வேண்டும்** என்ற கட்டுரையில் மனதை வலிமைப்படுத்துவதற்கான வழிமுறைகள்

(ஈ) **நீண்ட பயணம்** நாவலில் மாதவனின் பாத்திரப்படைப்பு (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) மணிபல்லவத்துக்குச் சென்ற மணிமேகலை புத்த பீடிகையை வணங்கி தனது பழம் பிறப்புணர்ந்த நிலையில் நிகழ்த்திய அறப்போதனைகள்:

- விலங்குகள், நரகர், பேய்கள் ஆகிய தீய பிறவிகளை ஆக்கும் தீய வினைகளை நீக்குதல் வேண்டும். (கலங்கஞர்த் தீவினைக் கடிமின்...)
- தேவர், மக்கள், பிரமர் ஆகிய சிறந்த பிறவிகளைத் தரும் நல்ல வினைகளைத் தவறாது கடைப்பிடியுங்கள்
  (நல்வினை அயராது ஓம்புமின்...)
- பொய்யில்லா ஞானியின் ( புத்தபெருமான் ) அறிவுரைகளைச் செவிமடுக்காதவர் பிறவித் துன்பத்தில் அழுந்துவர்.
- தடுத்தற்கரிய கூற்றுவனின் வருகைக்கு முன்பதாகவே அறத்தைச் செய்தல் வேண்டும்.

**(10 புள்ளிகள்)**

(ஆ) யசோதை கூற்றாக அமையும் இப்பதிகத்தில் கண்ணன்மேலான பெரியாழ்வாரின் ஈடுபாடு பலவாறாக வெளிப்படுகின்றது.

கண்ணனின் அழகிலே ஈடுபடல்

- அழகனே!
- வண்ணம் அழகிய நம்பீ!
- மாணிக்கமே! என் மணியே!
- மணிவண்ணா!

கண்ணனின் திருவிளையாடல்களை வியத்தல்

- மராமரம் சாய்த்தமை.
- பேய்ச்சி முலையுண்டு, அவள் உயிர்போக்கியமை.
- கம்சனின் வஞ்சனையால் வந்த சகடத்தை உதைத்தமை
- கன்றால் கனி உதிர்த்தமை

கண்ணனின் குறும்புச் செயல்களை நயத்தல்.

- வெண்ணையளைந்த குணுங்கும்...
- கன்றுகள் ஓட, செவியில் கட்டெறும்பு இடுதல்.
- எண்ணெய்க் குடத்தை உருட்டல்.
- இளம்பிள்ளையைக் கிள்ளி எழுப்புதல்.

கண்ணனின் கடவுள் தன்மையில் திளைத்தல்.

- நண்ணல் அரிய பிரானே!
- வாய்த்த புகழ் மணிவண்ணா!
- நாரணா!
- கண்ணபிரான்! **(10 புள்ளிகள்)**

(இ) - முன்னோர்கள் ஏற்படுத்திய நோன்புகளை உரியவாறு கடைப்பிடித்தல்.

- நாக்கு முதலிய பொறிகளை அடக்கும் பயிற்சி (உண்ணா நோன்பு)
- உடம்புக்குத் தீமையானவையும் புலன்களுக்குச் சுவையானவையுமான விடயங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான பயிற்சி
- பேசா நோன்பு
- தவறுகளுக்காக மனம் வருந்தி நாட்குறிப்பு எழுதும் பயிற்சி
- தீய இயல்புகளை விடுவதாகத் தினவழிபாட்டின்போது மேற்கொள்ளும் உறுதி

**(10 புள்ளிகள்)**


(ஈ) பிரதான பாத்திரமாகிய செல்லத்துரையின் தோழன் பறையர் சமூகத்தவன் : தோட்ட வேலை செய்பவன்.
குணவியல்புகள்

- பிறருக்கு உதவுவதில் முன்னிற்பவன்
- ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இலட்சிய புருஷனாக விளங்குபவன்.
- தலைமைத்துவ ஆற்றல் கொண்டவன்
- சமூக யதார்த்தத்தை உணர்ந்தவன்
- எத்தகைய சூழலிலும் பொறுமை இழக்காது சிந்தித்துச் செயற்படுபவன்
- சாதிப் பாகுபாட்டைத் தகர்க்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவன்
- திட்டமிட்டுச் செயற்படுபவன்
- பதவி, புகழ் என்பவற்றில் நாட்டமில்லாதவன். **(10 புள்ளிகள்)**

**(10 × 2 = 20 புள்ளிகள்)**

**8 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**


**வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




இவ்வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 27%
06 - 10 ஆயிடையில் 38%
11 - 15 ஆயிடையில் 28%
16 - 20 ஆயிடையில் 7%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




(அ), (ஆ), (இ), (ஈ) என்னும் நான்கு தெரிவுகளைக் கொண்ட இவ்வினாவில் விரும்பிய இரண்டுக்கு விடையளிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வினாவில் தெரிவு (ஆ) இலகுதன்மை கூடியதாகவும் (48%) தெரிவு (இ) இலகுதன்மை குறைந்ததாகவும் (36%) காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- செய்யுளில் கூறப்பட்ட அறப் போதனைகள் எவையென அறிந்திருக்காமை.
- கண்ணனின் அழகையும் லீலைகளையும் அதிகம் விவரித்ததன்றி கண்ணனில் பெரியாழ்வார் கொண்ட ஈடுபாட்டை விவரிக்காமை.
- மனதை வலிமைப்படுத்துவதற்கான வழிமுறைகளை மாத்திரம் எடுத்துக்கூறாமல் கட்டுரையில் உள்ள எல்லா விடயங்களையும் தொகுத்துக் கூறியமை.
- பாத்திரப்படைப்பு பற்றி குறிப்பாக எழுதாது கதையைக் கூறமுற்பட்டமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- குறித்த பாடப்பகுதிகளில் தெளிவான அறிவினைப் பெற கிரகித்தல் முறையில் வழிப்படுத்தல்.
- கேட்கப்பட்ட வினாவுக்கேற்ப சுட்டிப்பாக விடை எழுத வழிப்படுத்தல்.
- ஆதாரங்கள் மேற்கோள்கள் காட்டி விடையளிக்க நெறிப்படுத்தல்.
- வினாவில் எதிர்பார்க்கப்படும் விடயங்களை உரிய வரையறைக்கு அமைய எழுத வழிப்படுத்தல்.

## 2.1.3 வினாத்தாள் I இற்கு விடையளித்தமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்

- இலக்கியங்கள் தோன்றிய பின்னணி பற்றிய விளக்கமின்றி மாணவர்கள் சிலர் விடையளித்துள்ளமை
  - இலக்கியங்கள் எழுந்த காலப் பின்னணி பற்றிய தெளிவினை ஏற்படுத்துதல்.

- நயந்து விடையெழுதும் தன்மை குறைவாயிருந்தமை
  - இரசனையைத் தூண்டக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் முறையினை மேற்கொள்ளல்.

- வினாக்களுக்கு சுட்டிப்பாக அல்லாமல் பொதுவாக விடையளிக்கும் போக்கு காணப்பட்டமை
  - சுட்டிப்பான விடைகளைப் பொருத்தமான மேற்கோள்களுடன் எழுதுவதற்கான பயிற்சியளித்தல் அவசியமானதாகும்.
  - வினாக்களில் காணப்படும் "வலியுறுத்தப்பட்டிருக்குமாறு", சித்திரிக்கப்பட்டிருக்குமாறு" போன்ற தொடர்களின் பொருளறிந்து அதற்கேற்ப விடையளிக்க வழிப்படுத்தல்.
  - மாணவர்களின் சுயசிந்தனை வெளிப்படும் வகையில் எழுதும் ஆற்றலை வளர்த்தல்.
  - அணிகள், பாத்திரப் படைப்பு, இலக்கிய உத்திகள், மொழிக் கையாட்சி, உணர்ச்சி வெளிப்பாடு தொடர்பான வினாக்களை வழங்கி பயிற்சியளித்தல்.
  - மாணவர்களின் ஒப்படைகளைத் திருத்தி வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்கி வழிப்படுத்துதல்.
  - பாடப்பகுதிகளை குறிப்பாக உரைநடைப்பகுதிகளை மாணவர்கள் சுயமாக வாசித்து, விளங்கி, அவை தொடர்பாக விமர்சிக்கவும் கலந்துரையாடவும் விவாதிக்கவும் வழிப்படுத்தல்.
  - இலக்கிய வடிவங்களின் (கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை ....) அமைப்பு, பண்பு, படைப்பாக்க நுட்பங்கள் முதலியன பற்றிய அறிவினை மாணவர்களுக்கு வழங்குதல்.
  - படைப்புகளிற் கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றி பகுப்பாய்வு அடிப்படையிலும் ஒப்பீட்டு அடிப்படையிலும் விளக்குதல்.

## 2.2 வினாத்தாள் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.2.1 வினாத்தாள் II - கட்டமைப்பு

- நேரம் 03 மணித்தியாலம்
- மொத்தம் 100 புள்ளிகள்
- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

  பகுதி I :- 03 கட்டாய வினாக்களைக் கொண்டது.

  பகுதி II :- "அ" பிரிவிலிருந்து ஒரு வினாவிற்கும்

  "ஆ" பிரிவிலிருந்து ஒரு வினாவிற்கும் விடையளித்தல் வேண்டும்.
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

## 2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள் புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும், முடிவுகளும், ஆலோசனைகளும்

### பகுதி I

1. (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் மூக்கொலி
(1) ப் (2) வ் (3) ம் (4) ய் (5) த் (......)

1.2 மொழி இறுதியில் **இடம்பெறாத** உயிரெழுத்து
(1) அ (2) ஆ (3) ஊ (4) எ (5) ஐ (......)

1.3 வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
(1) அக்கா (2) அப்பா (3) அத்தான் (4) தம்பி (5) மச்சான் (......)

1.4 உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்த சொல்
(1) மரத்துக்கு (2) அவரால் (3) பனையை (4) பணத்தோடு (5) வீட்டிலிருந்து (......)

1.5 அல்வழிப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) வீட்டுக்குவீடு (2) வீட்டுக்கூரை (3) வீட்டுவாசல் (4) வீடுவாசல் (5) மண்வீடு (......)

1.6 பின்வருவனவற்றுள் பகாப்பதம்
(1) ஓட்டம் (2) நகுதல் (3) அரசன் (4) புகழ்ச்சி (5) பப்படம் (......)

1.7 பின்வருவனவற்றுள் கூட்டுப்பகுதி **இடம்பெறாத** சொல்
(1) கைவிட்டார்கள் (2) வாழைப்பழங்கள் (3) ஓடுகின்றார்கள்
(4) உரையாசிரியர்கள் (5) நீரேந்துபகுதிகள் (......)

1.8 பின்வருவனவற்றுள் சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்
(1) மலையில் (2) வீட்டிற்கு (3) யானையால் (4) மாளிகையை (5) ஆசிரியரது (......)

1.9 பின்வருவனவற்றுள் படர்க்கைத் தற்சுட்டுப் பெயர் இடம்பெற்ற வாக்கியம்
(1) அவன் என்னை அன்போடு வரவேற்றான்.
(2) அவன் உன்னைப் பாராட்டிப் பேசினான்.
(3) அவன் எங்களை மிகவும் நம்பியிருக்கிறான்.
(4) அவன் தன்னைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை.
(5) அவன் நீங்கள் சொன்னால் கட்டாயம் கேட்பான். (......)

1.10 'சில' என்பது அடைமொழியாக இடம்பெற்ற வாக்கியம்
(1) சிலர் மாணவர்களைக் குறை கூறுகிறார்கள்.
(2) மாணவர்கள் சில குறைகளைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.
(3) குறைகள் சிலவற்றை ஒத்துக்கொண்டார்கள்.
(4) அவற்றுள் சிலவற்றுக்குத் தீர்வு காணப்பட்டன.
(5) சில தீர்க்க முடியாதவையாகவே உள்ளன. (......)

1.11 பின்வருவனவற்றுள் வினையடியாகப் பிறந்த ஆக்கப்பெயர்
(1) தேர்ச்சி (2) சமத்துவம் (3) புத்திசாலி
(4) புவியியல் (5) ஆட்டக்காரன் (......)

1.12 பின்வருவனவற்றுள் வேற்றுமைத் தொகை இடம்பெற்ற சொல்
(1) ஆடுகதிரை (2) வட்டமேசை (3) தென்னைமரம்
(4) முத்துப்பல் (5) மலர்மாலை (......)

1.13 பின்வருவனவற்றுள் அல்விகுதி பெற்றமைந்த தொழிற்பெயர்
(1) உண்ணல் (2) காணுதல் (3) போதல்
(4) பாய்தல் (5) விரைதல் (......)

1.14 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல' - இங்கு **விழுந்தவன்** என்ற சொல்

(1) வினைமுற்று (2) வினையெச்சம் (3) வினையாலணையும் பெயர்
(4) தொழிற்பெயர் (5) பெயரெச்சம் (......)

1.15 நிபந்தனை வினையெச்சம் இடம்பெற்ற வாக்கியம்

(1) மழை பெய்ததால் பயிர் நன்கு விளைந்தது.
(2) கடவுளின் அருளால் நாங்கள் நலமாய் இருக்கிறோம்.
(3) உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள்.
(4) உண்ட களைப்பால் உறங்கிவிட்டேன்.
(5) கடுமையாக உழைத்தால்தான் வாழ்க்கையில் முன்னேறலாம். (......)

1.16 முற்றும்மை இடம்பெற்ற வாக்கியம்

(1) கண்ணனும் வந்தான். (2) கமாலும் வரவில்லை.
(3) எவரும் வரவில்லை. (4) எல்லாரும் வரவில்லை.
(5) வந்தாலும் வருவார்கள். (......)

1.17 எனக்கு நல்ல பசி - இது

(1) வினை தொக்கிய வாக்கியம். (2) எழுவாய் தொக்கிய வாக்கியம்.
(3) பெயர்ப்பயனிலை கொண்ட வாக்கியம். (4) கூட்டு வாக்கியம்.
(5) கலப்பு வாக்கியம். (......)

1.18 பின்வருவனவற்றுள் அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி

(1) மனம், மானம், மின்னல், மேலதிகம், மையல்
(2) கந்து, சிந்து, நந்து, பந்து, முந்து
(3) தக்கை, திக்கு, துக்கம், துகில், தூரம்
(4) இலக்கம், இலாவகம், இல்லம், இலிங்கம், ஈசல்
(5) அகலம், அகாலம், இகல், உலகம், எருது (......)

1.19 அழகும் அறிவும் அடக்கமும் நிறைந்த அந்தப் பையன் - மேற்படி தொடர்

(1) பெயர்த் தொடர் (2) வினையடைத் தொடர் (3) பெயரடைத் தொடர்
(4) வினைத் தொடர் (5) வாக்கியத் தொடர் (......)

1.20 எதிர்கால வினைமுற்று வழமைப் பொருள் உணர்த்தும் வாக்கியம்

(1) நான் நாளை இந்நேரம் ஊருக்குப் போய்க் கொண்டிருப்பேன்.
(2) பாடசாலை விட்டதும் நாங்கள் தினமும் விளையாடுவோம்.
(3) மலைநாட்டில் வருடம் முழுவதும் மழை பெய்கிறது.
(4) அடுத்த வாரம் வேலையை முடித்துவிடுவேன்.
(5) இனிமேல் தினமும் ஒழுங்காகப் படிப்பேன். (......)

(20 புள்ளிகள்)

* *

**வினாத்தாள் II பகுதி I எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 1.1 | 3 |
| 1.2 | 4 |
| 1.3 | 4 |
| 1.4 | 3 |
| 1.5 | 4 |
| 1.6 | 5 |
| 1.7 | 3 |
| 1.8 | 2 |
| 1.9 | 4 |
| 1. 10 | 2 |
| 1. 11 | 1 |
| 1. 12 | 5 |
| 1. 13 | 1 |
| 1. 14 | 3 |
| 1. 15 | 5 |
| 1. 16 | 3 |
| 1. 17 | 1 |
| 1. 18 | 4 |
| 1. 19 | 1 |
| 1. 20 | 2 |
| | 1 x 20 = 20 புள்ளிகள் |

**பகுதி I "அ" இற்குரிய பல்தேர்வு வினாக்கள் அமைப்பு முறை**

| வினா இலக்கம் | விடயம் |
|---|---|
| 1.1, 1.2, 1.3, 1.18 | எழுத்தியல் |
| 1.4, 1.5 | புணரியல் |
| 1.6, 1.7, 1.8, 1.13 | பதவியல் |
| 1.7, 1.9, 1.10, 1.11, 1.14 | பெயரியல் |
| 1.15 | வினையியல் |
| 1.16 | இடையியல் |
| 1.17, 1.20 | வாக்கியவியல் |
| 1.12, 1.19 | தொடரியல் |

**வினாத்தாள் II பகுதி I "அ" இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)**

| வினா இலக்கம் | சரியான தெரிவு | தெரிவு செய்யப்பட்ட தெரிவின் வீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | Missing |
| 1. 1 | 3 | 2.6 | 6.9 | 83.8 | 4.3 | 2.0 | 0.5 |
| 1. 2 | 4 | 12.7 | 4.3 | 21.5 | 55.0 | 6.1 | 0.5 |
| 1. 3 | 4 | 1.4 | 2.3 | 15.3 | 72.4 | 8.4 | 0.3 |
| 1. 4 | 3 | 21.1 | 15.3 | 35.1 | 17.0 | 10.4 | 1.2 |
| 1. 5 | 4 | 22.0 | 13.4 | 15.4 | 25.7 | 22.3 | 1.2 |
| 1. 6 | 5 | 9.2 | 15.6 | 21.4 | 8.6 | 44.6 | 0.8 |
| 1. 7 | 3 | 12.5 | 11.3 | 53.0 | 5.3 | 16.8 | 1.1 |
| 1. 8 | 2 | 5.2 | 47.9 | 13.7 | 15.9 | 16.2 | 1.1 |
| 1. 9 | 4 | 23.5 | 7.6 | 17.9 | 41.4 | 8.1 | 1.5 |
| 1. 10 | 2 | 16.8 | 49.9 | 11.9 | 8.7 | 11.6 | 1.1 |
| 1. 11 | 1 | 16.2 | 4.4 | 26.1 | 5.3 | 47.0 | 0.9 |
| 1. 12 | 5 | 17.3 | 18.8 | 26.9 | 15.0 | 21.2 | 0.9 |
| 1. 13 | 1 | 59.1 | 6.7 | 14.8 | 15.1 | 3.7 | 0.6 |
| 1. 14 | 3 | 6.1 | 11.2 | 72.7 | 5.5 | 3.8 | 0.8 |
| 1. 15 | 5 | 14.2 | 4.0 | 8.7 | 9.5 | 62.6 | 1.1 |
| 1. 16 | 3 | 27.9 | 4.3 | 36.5 | 14.4 | 16.2 | 0.8 |
| 1. 17 | 1 | 40.9 | 29.0 | 19.5 | 6.1 | 3.8 | 0.6 |
| 1. 18 | 4 | 9.3 | 53.4 | 9.3 | 17.4 | 9.8 | 0.8 |
| 1. 19 | 1 | 12.2 | 12.8 | 52.1 | 3.7 | 18.8 | 0.5 |
| 1. 20 | 2 | 19.7 | 28.6 | 7.8 | 16.0 | 26.7 | 1.2 |

ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

## வினாத்தாள் II பகுதி I

**வினா இலக்கம் 1 "அ" (பல்தேர்வு வினாக்கள்) தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள்**

- வினா இலக்கம் 1.1 க்கு சரியாக விடையளித்தோர் வீதத்தினை நோக்கும்போது 83.8% ஆக காணப்படுவதால் அது இலகுதன்மை கூடிய வினாவாக அமைந்துள்ளது.

- வினா இலக்கம் 1.2 க்கு 55.0% ஆனவர்கள் சரியான விடையளித்துள்ளனர். இது சராசரியான இலகுதன்மை உடையதாகும்.

- வினா இலக்கம் 1.3 க்கு 72.4% ஆனவர்கள் சரியான விடையளித்துள்ளனர். இதுவும் இலகுதன்மை பொருந்திய வினாவாகும்.

- வினா இலக்கம் 1.4க்கு 35.1% ஆனவர்களே சரியான விடையளித்துள்ளனர். இது இலகுதன்மை குறைந்ததாகும். உயிர்முன் உயிர் புணரும்போது வகர/ யகர உடம்படுமெய் தோன்றுவது பற்றிய விளக்கம் உருபு புணர்ச்சி பற்றிய விளக்கம் என்பன பரீட்சார்த்திகளிடம் குறைவு என்பதைக் காட்டுகின்றது.

- வினா இலக்கம் 1.5 க்கு 25.7% ஆனவர்களே சரியாக விடையளித்துள்ளனர். அதேவேளை பொருத்தமற்ற தெரிவுகளான 1, 5 என்பவற்றை முறையே 22.0% ஆனவர்களும் 22.3% ஆனவர்களும் தெரிவுசெய்துள்ளனர். இதிலிருந்து பரீட்சார்த்திகளுக்கு அல்வழிப்புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு பற்றிய தெளிவான விளக்கம் இல்லை என்பது புலனாகின்றது.

- வினா இலக்கம் 1.6 க்கு 44.6% ஆனவர்களே சரியாக விடையளித்துள்ளனர். இதனை ஓரளவு கடினதன்மை பொருந்திய வினாவாகக் கருதமுடியும். பகுபத உறுப்புகள் பற்றிய தெளிவான அறிவு பரீட்சார்த்திகளிடம் இல்லை என்பது புலனாகின்றது.

- வினா இலக்கம் 1.7 க்கு 53.0% ஆனோர் சரியாக விடையளித்துள்ளமையால் இது இலகுதன்மை பொருந்தியதாகும்.

- வினா இலக்கம் 1.8 க்கு சரியாக விடையளித்தோர் 47.9% ஆகும். இதுவும் ஓரளவு இலகுதன்மையுள்ளதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்கு பகுபத உறுப்புகள் பற்றிய தெளிவான விளக்கம் இல்லை.

- வினா இலக்கம் 1.9 க்கு சரியாக விடையளித்தோர் 41.4% வீதமாகும். இதுவும் சாதாரண கடினதன்மை பொருந்தியதாகும். தான் என்பது அவன் என்ற படர்க்கைச் சொல்லால் சுட்டப்படும் நபரையே தன்மையில் சுட்டுகின்ற பெயர் என்ற தெளிவு பரீட்சார்த்திகள் பலரிடம் இல்லை.

- வினா இலக்கம் 1.10 க்கு 49.9% ஆனோர் சரியான விடையைத் தெரிவு செய்தமையால் இது சராசரி இலகுதன்மை பொருந்தியதாகும்.

- வினா இலக்கம் 1.11 க்கு 16.2% ஆனவரே சரியாக விடையளித்துள்ளனர். அதேவேளை பிழையான விடையான 5 ஆம் இலக்க விடையை 47.0% ஆனோர் தெரிவுசெய்துள்ளனர். அதற்குக் காரணம் ஆட்டக்காரன் என்ற சொல் 'ஆடு' என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்ததென்று பெரும்பாலான பரீட்சார்த்திகள் கருதியுள்ளனர். அத்தோடு சரியான விடையான தேர்ச்சி என்ற வினைச்சொல்லின் அடிச்சொல்லான தேர் என்ற வினைச்சொல் பரீட்சார்த்திகளுக்குப் பரிச்சயமான ஒரு சொல் அல்ல என்று கருதவும் இடமுள்ளது.

- வினா இலக்கம் 1.12 க்கு 21.2% ஆனோர் மட்டும் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். அதேவேளை பிழையான விடைகளுள் ஒன்றான (3) ஆம் விடையை 26.9% ஆனோர் தெரிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் (1) ஆம் விடையைத் தெரிவுசெய்தோர் 17.3% ஆகவும் (2) ஆம் விடையைத் தெரிவுசெய்தோர் 18.8% ஆகவும் உள்ளனர். தொகைநிலைத் தொடர்கள் பற்றிய அறிவு பரீட்சார்த்திகளிடம் இல்லை என்பது புலனாகின்றது.

- வினா இலக்கம் 1.13 க்கு 59.1% ஆனோர் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இது இலகுதன்மை பொருந்திய வினாவாகும்.

- வினா இலக்கம் 1.14 க்கு 72.7% ஆனோர் சரியான விடையளித்துள்ளனர். இது இலகுதன்மை கூடிய வினாவாகும்.

- வினா இலக்கம் 1.15 க்கு 62.6% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர். இவ்வினா இலகுதன்மை பொருந்திய வினாவாகும்.

- வினா இலக்கம் 1.16 க்கு 36.5% ஆனோர் மட்டும் சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர். இது இலகுதன்மை குறைந்த வினாவாகும். 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் பற்றிய தெளிந்த அறிவின்மை புலனாகின்றது.

- வினா இலக்கம் 1.17 க்கு 40.9% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர். இலகுதன்மை குறைந்த வினாவாகும். வாக்கிய உறுப்புகள் தொக்கிநிற்பது பற்றிய தெளிவான அறிவின்மை.

- வினா இலக்கம் 1.18 க்கு சரியான விடையளித்தோர் 17.4% ஆனோர் மாத்திரமே. அதேவேளை பொருத்தமற்ற விடைகளுள் ஒன்றான (2) ஆம் இலக்க விடையை 53.4% ஆனோர் தெரிவு செய்தமை கருத்திற்கொள்ளவேண்டியது. வினா எதிர்மறை வடிவில் இருந்தமை கவனத்திற் கொள்ளப்படாமை காரணமாகலாம்.

- வினா இலக்கம் 1.19 க்கு சரியாக விடையளித்தோர் 12.2% ஆனோர் அதேவேளை பிழையான விடைகளுள் ஒன்றான (3) ஆம் இலக்க விடையை 52.1% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். தொடர் வகைகள் பற்றிய தெளிவு பரீட்சார்த்திகளிடம் இல்லை. குறிப்பாக பெயர்த் தொடருக்கும் பெயரடைத் தொடருக்கும் இடையிலான வேறுபாடு பற்றிய தெளிவு இல்லை.

- வினா இலக்கம் 1.20 க்கு சரியான விடையைத் தெரிவுசெய்தோர் 28.6% ஆனவர்களே. அதேவேளை பிழையான விடைகளுள் ஒன்றான (5) ஆம் இலக்க விடையை 26.7% ஆனோர் தெரிவு செய்துள்ளமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். வழமைப் பொருள் என்ற எண்ணக்கரு பற்றிய தெளிவின்மை.

பகுதி I

1. (ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. 'ஆல்' வேற்றுமை உருபு கருத்தாப் பொருளிலும் காரணப் பொருளிலும் வருவதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
2. 'கூட்டுவினை' என்றால் என்ன ? உதாரணம் தந்து விளக்குக.
3. 'பெயரெச்சம்' என்றால் என்ன ? உதாரணம் தந்து விளக்குக.
4. செயப்படுபொருள் குன்றிய வினையை உதாரணம் தந்து விளக்குக.
5. 'தோட்டத் தொழிலாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்காகக் குரல்கொடுத்த நடேசையர்' என்பதில் காணப்படும் தவறைச் சுட்டிக்காட்டி, பொருத்தமான முறையில் திருத்தி எழுதுக. (10 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(ஆ) 1. கருத்தாப்பொருளில் - மாணவனால் கட்டுரை எழுதப்பட்டது.

காரணப்பொருளில் - அவன் நோயால் வருந்தினான்.

(இவை போன்ற உதாரணங்கள்)

2. ஒன்றுக்கு மேற்பட்ட அடிச்சொற்கள் சேர்ந்து அமையும் வினை கூட்டுவினை எனப்படும்.

- பெயர் + வினை - கைது + செய் = கைதுசெய்
- வினை + வினை - போய் + விடு = போய்விடு
- இடை + வினை - முன் + ஏறு = முன்னேறு

( இவை போன்று குறைந்தது ஒரு உதாரணம் )

3. பால் விகுதி பெறாத குறைச் சொல்லாய் பெயரைக்கொண்டு முடியும் எச்ச வினை 'பெயரெச்சம்' எனப்படும்.

இது

பெயரடி + கால / எதிர்மறை இடைநிலை + அ / உம் விகுதி

என்ற அமைப்புடையது

பெயரெச்ச விகுதி அ, உம்

உதாரணம் : படித்த, படியாத, பறக்கின்ற, பறக்கும்

(குறைந்தது ஒரு உதாரணம்)

4. வினைச் சொல்லானது செயப்படுபொருளை அவாவி நிற்காதவிடத்து அது செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும்.


உதாரணம் : மாணவர்கள் சென்றனர்.

5. • ஒடுக்கு முறைக்காகக் குரல் கொடுத்த என்பது தவறு.
   • ஒடுக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுத்த என வர வேண்டும்.

**(2 × 5 = 10 புள்ளிகள்)**

**(20 +10 = 30 புள்ளிகள்)**

**1 ஆம் வினாவின் அ, ஆ பகுதிகளுக்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**





வினாத்தாள் II இன் பகுதி I இலுள்ள 1 ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 30 ஆகும். (அ - 20 புள்ளிகள், ஆ-10 புள்ளிகள்)

இதில் 00 - 07 ஆயிடையில் 27%
08 - 15 ஆயிடையில் 53%
16 - 22 ஆயிடையில் 17%
23 - 30 ஆயிடையில் 3%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 16 அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளோர் 20% இனர் ஆவர். பரீட்சார்த்திகளுள் 80% ஆனோர் மொத்தப்புள்ளியில் அரைவாசிக்கும் குறைவான புள்ளியையே பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் கூடிய இலகுதன்மை கொண்டதாக உபபிரிவு 1 காணப்படுகின்றது. இலகுதன்மை குறைந்ததாக உபபிரிவு 5 காணப்படுகின்றது.

**வினா இலக்கம் 1 "ஆ" தொடர்பாக அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**

- வினா 1 க்கு பெரும்பாலானோர் சரியாக விடையளித்திருப்பினும் சில பரீட்சார்த்திகள் காரணப் பொருளுக்குரிய உதாரணத்தைச் சரியாக எழுதத் தவறியுள்ளனர்.
- கூட்டுவினை என்பதன் சரியான வரைவிலக்கணத்தை பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவில்லை. பெரும்பாலானோர் தனி வினையையே உதாரணமாகக் காட்டியிருந்தனர்.
- பெரும்பாலான பரீட்சார்த்திகள் பெயரெச்சம் பற்றிய விளக்கம், உதாரணம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை மாத்திரமே எழுதியிருந்தனர். பூரணமான விடையளிக்காததால் புள்ளிகளை இழந்துள்ளனர்.
- செயப்படுபொருள் குன்றிய வினைக்கு சில பரீட்சார்த்திகள் செயப்படுபொருள் தொக்க வாக்கியங்களை உதாரணமாகத் தந்திருந்தனர்.
- ஒடுக்குமுறை என்ற சொல்லின் பொருளை அறிந்து, அதனோடு 'எதிராக' என்ற சொல்லைச் சேர்த்து எழுதவேண்டும் என்பதை விளங்கிக் கொள்ளாமை.

**ஆலோசனைகள்**

- கூட்டுவினை ஆக்கப்படும் முறை பற்றி தெளிவான விளக்கத்தை வழங்குதல்.
- எச்சவினைகள் பற்றிய விளக்கத்தை பொருத்தமான உதாரணங்களை வழங்கி விளக்குதலும்; உரிய பயிற்சிகள் வழங்குதலும்.
- செயப்படுபொருள் குன்றாவினை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள், தொக்கவினை என்பவற்றின் வேறுபாடுகளை உரிய உதாரணங்கள் கொடுத்து விளக்குதல். பல்வேறுபட்ட வினைவடிவங்களை கொடுத்து அவற்றை இனங்காணச் செய்தல்.
- வாக்கியங்களில் கூறவந்த பொருள் தெளிவாகவும் முரண்படாதவகையிலும் அமைந்திருப்பதைக் கருத்திற்கொள்ளச் செய்தல்.

**வினாத்தாள் II - வினா I பகுதி அ, ஆ வினாக்களின் அமைப்பு :**

**(அ) வினா அமைப்பில் அவதானிக்கப்பட்டவை**

- புறவயமான பல்தேர்வு வினாக்களை உடையது. அச்சொட்டான விடை எதிர்பார்க்கப்படுகின்றது.
- வேற்றுமை, வினைச் சொல்லின் வகைகள், எச்ச வினைகள், வாக்கியவியல், வாக்கியப் பொருண்மை என்பன தொடர்பான வினாக்கள் அமைந்துள்ளன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

(அ)
- சொற் புணர்ச்சி பற்றிய தெளிவின்மை.
- பகுபதம், பகாப்பதம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை உணராமை.
- படர்க்கைத்தற்சுட்டுப் பெயர் அமையுமாற்றை விளங்கிக்கொள்ளாமை.
- சில என்ற சொல் அடைமொழியாக அமையுமாற்றை விளங்காமை.
- தொகைமொழி வகைகளை வேறுபடுத்தி உணராமை.
- தொடரிலக்கணம் தொடர்பான பரிச்சயம் இன்மை.

(ஆ)
- கூட்டுவினை அமைப்பினை விளங்கிக்கொள்ள முடியாமை.
- பெயரெச்சம் பற்றி உதாரணத்துடன் விளக்குவதில் இடர்ப்பட்டுள்ளமை. சரியான உதாரணத்தை எழுதியவர்கள்கூட அதற்குரிய விளக்கத்தை எழுதத் தவறியுள்ளமை.
- செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள்குன்றா வினை இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை காணத்தவறியுள்ளமை.
- பரீட்சார்த்திகள் சிலர் தரப்பட்ட வாக்கியத்திலுள்ள தவறைச் சுட்டிக்காட்டிய போதும் அதனைச் சரியாகத் திருத்தி எழுத முடியாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- எழுத்துகளை வகை, தொகை, ஒலிப்பு முறை என்றவாறு வகைப்படுத்தி அறிய வழிப்படுத்தல்.
- பகுபத உறுப்புகள் பற்றிய பூரண விளக்கத்தை உதாரணங்கள் மூலம் மாணவர்களுக்கு அளித்தல்.
- தொடரியல் பற்றிய விளக்கங்களை தகுந்த உதாரணங்களோடு வகுத்தல். தொகைநிலைத் தொடர்கள் பற்றி பூரண விளக்கமளித்தல்.

2. (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வண்ணம் நம் பெரியார் நமக்கு உதவிய நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் பற்றியனவேயாம். இவையெல்லாம் நீதியின்பால் அமைவனவெனினும் இவற்றுள், பொருட் பகுதியைப் பற்றியெழுந்த நூல்களையே 'நீதிநூல்' எனப் பெரியோர் வழங்குவர். அப்பொருட் பகுதியை மாத்திரம் சிறப்பாக எடுத்துக் கூறிய ஆசிரியரும் உளர். அதனோடு அறமுதலிய ஏனைய உறுதிப்பயன்களையும் இயைத்துக் கூறிய ஆசிரியர்களே பெரும்பான்மையோராவர். இம்முறையிலே தமிழிற் சிறந்த நீதிகளை வழங்கிய வண்மையிற் சிறந்த பெரியார் திருவள்ளுவரேயாவார். அவர்க்கு முன்னும் பின்னும் நீதிநூலருளிய ஆசிரியர்கள் வடமொழியிலும் தமிழிலும் பலரிருந்தனர். எனினும், அன்னார் புகழொளியெல்லாம் வானத்து விளங்கும் மீன்களாக, வள்ளுவர் சீர்த்தி அப்பன்மீன் நடுவண் பான்மதி போலத் திகழ்வதாகும். "எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால், இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்றபடி உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய்மொழியிற் காணப்படுவனவேயாம். தம் தெள்ளிய கல்வியாலும் ஒள்ளிய மதிநுட்பத்தாலும் உலகியலையும் மக்கள் வழக்கவொழுக்கங்களையும் அழுந்தியறிந்து உள்ளத்தமைத்துத் 'திருக்குறள்' என்னும் நீதிக் களஞ்சியத்தை உலகமுள்ளளவும் நிலைபெற யாத்துதவிய பெருமையே பொய்யில் புலவர் புகழொளி விஞ்சுதற்கு ஏதுவாயிற்று.

திருவள்ளுவர் எழுதிய நூல் ஒழுங்கிற்கும் ஏனையோர் நூன்முறைக்கும் உள்ள வேறுபாடுகள் பலவாம். தாம் கூற மேற்கொண்ட பொருளை நன்றாக ஆராய்ந்து இவ்வாறு தெளிவுபடுத்த வேண்டுமென்று உள்ளத்தமைத்துப் பின்னர்ச் செய்யுள் வடிவில் இவர் வெளியிட்டுள்ளார். பெரும்பான்மையும் மேற்கொண்ட பொருளின் இலக்கணம், அதன் சிறப்பு, அதனாலாம் பயன், அஃதில்வழி வருந் தீங்கு என்று இன்னோரன்ன பாகுபாடுகளை வரையறுத்துக் கொண்டு கூறுதல் இவர் இயல்பு. (10 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சங்ககாலத்துப் புலவர்களுள் ஒருவராகிய கபிலர் அப்புலவர்களாலேயே புகழப்பட்ட பெருமையுடையவர். இவரது செய்யுட்களின் அளவை நோக்கினாலும் இவரே முதன்மையாக உள்ளவர். நற்றிணையில் இருபதும், குறுந்தொகையில் இருபத்தொன்பதும், ஐங்குறுநூற்றில் நூறும், பதிற்றுப்பத்தில் பத்தும், அகநானூற்றில் பதினாறும், புறநானூற்றில் முப்பதும், குறிஞ்சிப்பாட்டில் ஒன்றும் ஆக மொத்தம் இருநூற்றாறு செய்யுட்களை இவர் இயற்றியுள்ளார். இக்கணக்கில் இவர் செய்ததாகக் கூறும் குறிஞ்சிக்கலிச் செய்யுள் இருபத்தொன்பதும் சேர்க்கப்பெறவில்லை. ஏனெனின், கலித்தொகையில் ஒவ்வொரு கலியும் செய்தவர் இன்னார் என்று குறிப்பிடும் வெண்பா தற்காலத்துள்ளவர் ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பட்டது. ஆதலால், குறிஞ்சிக்கலி இவர் இயற்றியது என்பதற்குத் தக்க ஆதாரமில்லை.

கபிலர் என்ற பெயருடைய புலவர்கள் பலர் முற்காலத்தில் இருந்திருக்க வேண்டும். சங்கப் புலவர்களுள் 'தொல்கபிலர்' என்றொருவர் காணப்படுகிறார். இவர் வேறு, கபிலர் வேறு என்பதைத் 'தொல்' என்ற அடைமொழியே விளக்குகிறது. பதினோராந் திருமுறையில் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை முதலிய மூன்று பிரபந்தங்களையும் இயற்றியவர் 'கபிலதேவ நாயனார்'. இவரும் கடைச்சங்கப் புலவராகிய கபிலரும் வேறாவர் என்பது அப்பெயர்க்குப் பிற்படச் சேர்ந்துள்ள உபசாரத் தொடராலும், சங்க இலக்கிய நடைக்கும் திருவிரட்டை மணிமாலை முதலிய பிரபந்தங்களின் நடைக்கும் உள்ள வேறுபாட்டினாலும் அறியலாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய 'இன்னா நாற்பது' கபிலரால் இயற்றப்பட்டதென்பது பெரும்பாலார் கொள்கை. ஆனால் ஏட்டுப் பிரதிகள் சிலவற்றில் ஆசிரியர் பெயர் 'கபிலதேவர்' எனக் காணப்படுகிறது. மேலும் இக்கீழ்க்கணக்கு நூல்களை இயற்றினாருள் பெரும்பாலார் சங்ககாலத்தவரல்லர். எனவே, இன்னா நாற்பதும் பன்னிரு பாட்டியல் என்ற நூலில் கபிலர் பெயரால் வழங்கும் சூத்திரங்களும் சங்ககாலப் புலவரின் வேறான ஒருவரால் இயற்றப்பட்டன என்று கொள்ளுவதே நேரிது.

(i) சங்க இலக்கியங்களில் கபிலரால் பாடப்பட்ட பாடல்கள் பற்றி ஆசிரியர் தரும் விபரங்களைக் குறிப்பிடுக.

(ii) கபிலர் என்ற பெயருடைய புலவர்கள் பலர் முற்காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதற்குரிய ஆதாரங்கள் எவை ?

(iii) குறிஞ்சிக் கலிப்பாடல்கள் சங்ககாலக் கபிலரால் பாடப்படவில்லை என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது ?

(iv) கடைச்சங்கப் புலவரான கபிலரும் கபிலதேவ நாயனாரும் வேறுவேறு புலவர்கள் என்ற முடிவுக்கு ஆசிரியர் ஏன் வருகிறார் ?

(v) 'இன்னா நாற்பது' கபிலரால் எழுதப்படவில்லை என்பதை ஆசிரியர் எவ்வாறு நிறுவுகின்றார்.

(10 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) சுருக்கம்

- நாற்பொருள் பற்றிப் பாடிய நூல்கள் நீதியின்பால் அமைந்தபோதும் பொருட் பகுதி பற்றி எழுந்தவையே நீதி நூல்கள் எனப்படும்.
- எனினும் நாற்பொருளையும் இணைத்துப் பாடும் மரபில் திருவள்ளுவர் சிறந்து விளங்குகின்றமை.
- நீதிநூல்கள் பல எழுந்தபோதும் திருக்குறள் தலைசிறந்த நூலாக விளங்குகின்றமை.
- இதனால் திருவள்ளுவர் புகழ் உலகம் முழுவதும் சிறந்து விளங்குகின்றமை.
- வள்ளுவர் தாம் கூறவந்த கருத்தை உளங்கொண்டு செய்யுள் வடிவில் அமைத்து அவற்றை ஒழுங்கு படுத்திக் கூறியுள்ளமை.

**(10 புள்ளிகள்)**

(ஆ) **(i)**

- கபிலரே அதிக செய்யுட்கள் பாடியமை - 206
- நற்றினை 20, குறுந்தொகை 29, ஐங்குறுநூறு 100, பதிற்றுப்பத்து 10, அகநாநூறு 16, புறநாநூறு 30, குறிஞ்சிப்பாட்டு 01
- இக்கணக்கில் குறிஞ்சிக்கலிப்பாடல்கள் 29 சேர்க்கப்பெறவில்லை. இதற்கு தகுந்த ஆதாரம் இன்மை.

**(ii)** கபிலர், தொல்கபிலர், கபிலதேவர், கபிலதேவ நாயனார் என்ற வேறு வேறு பெயர்கள் வேறு வேறு நூல்களில் ஆசிரியர் பெயராகக் குறிப்பிடப்படுகின்றன. அந்நூல்கள் மொழிநடையால் வேறுபடுகின்றன.

**(iii)** கலித்தொகையில் ஒவ்வொரு கலியும் செய்தவர் இன்னாரென்று குறிப்பிடும் வெண்பா தற்காலத்து ஒருவருடையதாகும். குறிஞ்சிக்கலி கபிலரது என்பதற்குத் தக்க ஆதாரம் இல்லை.


**(iv)** கபிலதேவ நாயனார் என்பதில் பிற்படச் சேர்ந்துள்ள உபசாரத் தொடராலும் சங்க இலக்கிய நடைக்கும் திருவிரட்டை மணிமாலை முதலிய பிரபந்தங்களின் நடைக்கும் இடையே காணப்படும் வேறுபாட்டாலும் அறியலாம்.

**(v)** இன்னா நாற்பது ஏட்டுப் பிரதிகள் சிலவற்றில் ஆசிரியர் பெயர் "கபிலதேவர் எனக் காணப்படுகின்றமை கீழ்க்கணக்கு நூல்களை இயற்றிய பெரும்பாலார் சங்ககாலத்தவர் அல்லர்.

**(2 x 5 = 10 புள்ளிகள்)**


**(10 + 10 = 20 புள்ளிகள்)**

**2 வது வினாவுக்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




பகுதி II இல் 2ஆம் வினா கட்டாய வினாவாகும். மொத்தப்புள்ளி 20 ஆகும்.
(சுருக்கம் 10 புள்ளிகள், கிரகித்தல் 10 புள்ளிகள்)

இதில் 00 - 05 ஆயிடையில் 3%
06 - 10 ஆயிடையில் 19%
11 - 15 ஆயிடையில் 58%
16 - 20 ஆயிடையில் 20%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் (அ) பிரிவின் இலகுதன்மை 49% ஆகும். (ஆ) பிரிவின் உபபிரிவுகள் (i), (iii) ஆகியவை கூடிய இலகுதன்மை (95%) உடையனவாகும்.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

வினா 2 இல் "அ" பகுதி (சுருக்கம்)

- மையக்கருத்தைச் சரியாக இனங்காணாமை.
- பந்தியின் பிரதான கருத்தையும் துணைக்கருத்துக்களையும் முழுமையாக இனங்காணத் தவறியமை.
- சுருக்கம் எழுதும்போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களை கருத்திற்கொள்ளாமை.
- சொந்த மொழிநடையில் எழுதாது உரைப்பகுதியில் உள்ள வாக்கியங்களை பந்தியில் உள்ளவாறே எழுதியமை.
- சுருக்கம் ஒரே பந்தியில் எழுதப்பட வேண்டும் என்பதைக் கவனிக்கத் தவறியமை.
- கருத்துக்களை சீராக ஒழுங்குபடுத்தி எழுதாமை.
- மையக்கருத்தில் இருந்து விலகியும் விடுபட்டும் எழுதியமை.

வினா 2 "ஆ" பகுதி (கிரகித்தல்)

- வினா ii இற்கு பெயர்களை மட்டும் குறிப்பிட்டனரே அன்றி ஆதாரங்களை முன்வைக்கத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

சுருக்கம் :

- தரப்பட்ட பந்தியின் மையக்கருத்தை அறிந்து கொள்ளச் செய்தல்.
- மையக்கருத்தை வலியுறுத்தும் துணைக்கருத்துகளை அடையாளம் காணல்.
- சுருக்கம் எழுதும்போது தவிர்க்கப்படவேண்டிய விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடல்.
- சொந்த மொழிநடையில் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி எழுதப் பயிற்சியளித்தல்.
- சுருக்கத்தை, அதன் தர்க்க ரீதியான தொடர்ச்சி விடுபடாமல் எழுதப் பயிற்றுதல்.

கிரகித்தல் :

- கிரகித்தலுக்கு ஏற்ற பந்திகளைக் கொடுத்துப் பயிற்சியளித்தல். அவற்றை கருத்தூன்றி வாசிக்கச் செய்தல்.
- ஊகித்து விடையளிக்கக் கூடியனவான வினாக்களுக்கும் விடை எழுத பயிற்சியளித்தல்.
- கேட்கப்பட்ட வினாக்களை விளங்கிக்கொண்டு துல்லியமாக விடை எழுத பயிற்றுவித்தல்.

3. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து, **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) மனித விழுமிய மேம்பாடும் இலக்கியமும்

(ஆ) உயர்கல்வி வளர்ச்சிக்கு தனியார் துறையின் பங்களிப்பு

(இ) நாட்டு நலன் பேணல்

(ஈ) முத்தமிழ் வளர்ச்சிக்கு சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய பணிகள்

(உ) கைத்தொலைபேசிப் பாவனை: நன்மைகளும் தீமைகளும் (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) மனித விழுமிய மேம்பாடும் இலக்கியமும்

- இலக்கியம், மனித விழுமியம் - அறிமுகம்
- இலக்கியத்தின் முதன்மைப் பயன் மனித விழுமிய மேம்பாடே ஆகும்.
  - அறம்
  - பண்பாடு
  - அன்பு
- மனித நடத்தைகளைப் புரிந்துகொள்ளவும் பிறருக்குப் பயன்பட வாழவும் இலக்கியங்கள் வழிகாட்டுகின்றமை.
- மனித விழுமியங்களைப் பேசும் இலக்கியங்கள்
  - சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை
- இலக்கியங்கள் காட்டும் மனித விழுமியங்கள்

  அன்புடைமை

  பணிவுடைமை

  மன்னித்தல்

  உயிர் இரக்கம்

  உலக சகோதரத்துவம்

(ஆ) உயர்கல்வி வளர்ச்சிக்கு தனியார் துறையின் பங்களிப்பு

- கல்வியின் வெவ்வேறு மட்டங்கள் - ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை
- உயர்நிலைக் கல்வி பெற விரும்புவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு
- அரசினால் மட்டும் உயர்கல்வி வழங்க முடியாமையும் தனியார் துறையின் தேவையும்.
- தகுதி பெற்ற சகலருக்கும் பல்கலைக்கழக அனுமதி பெற முடியாமை.
- தனியார் துறையின் ஈடுபாட்டிற்கான காரணங்கள்
  - இலாபமீட்டல், பல்துறைசார் கற்கைநெறிகளின் இன்றைய தேவைப்பாடு, உலகமயமாக்கலின் தாக்கம்
- தனியார் துறை ஈடுபாட்டின் விளைவுகள்

  சாதகம்
  - உயர்கல்வி வாய்ப்பு அதிகரித்தல்.
  - வேலைவாய்ப்புக்களின் அதிகரிப்பு

  பாதகம்
  - இலவசக் கல்விக் கோட்பாடு பாதிக்கப்படல்
  - கல்வியின் தரம் பாதிக்கப்படல்
  - வசதியுள்ளவருக்கு மட்டும் உயர்கல்வி பெறும் வாய்ப்பு

(இ)

நாட்டு நலன் பேணல்

அறிமுகம் :

நாட்டு நலன் பேணலின் அவசியம் (வன்முறைகள், உள்நாட்டுப் போர், இனங்களிடையே முரன்பாடு, நாட்டுப்பற்றின்மை இவற்றை இல்லாது செய்தல்.) சமூக, பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

- நாட்டுப்பற்றுடையவராக இருத்தல்.
- நாட்டின் வளங்களைப் பாதுகாத்தல்
- நாட்டின் உடைமைகளைப் பேணுதல்
- சட்டம், ஒழுங்கை மதித்தல்.
- சமூக நல்லிணக்கத்தைப் பேணுதல். ( பன்மைத்துவம் )
- நாட்டுக்கு நற்பெயரை ஏற்படுத்தல்.
- நாட்டின் அபிவிருத்தியில் பங்குகொள்ளல்

(ஈ) முத்தமிழ் வளரச்சிக்கு சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய பணிகள்

- சுவாமி விபுலாநந்தர் (1892 - 1947) - சுருக்கமான அறிமுகம்

இயற்றமிழ்

இலக்கியம், மொழி, கல்வி, பண்பாடு, வரலாறு, ஒப்பாய்வு முதலியன சார்ந்த கட்டுரைகளும் நூல்களும் கவிதைகளும்

உதாரணம் : கவியும் சால்பும், இலக்கியச் சுவை, ஆங்கிலவாணி, யவனபுரத்துக் கலைச்செல்வம்

இசைத்தமிழ்

யாழ்நூல் - சங்க இலக்கியங்களில் உள்ள இசை பற்றிய குறிப்புக்கள், சிலப்பதிகார அரங்கேற்று காதை முதலியனவற்றிலுள்ள தகவல்கள், தேவாரங்களுடன் தொடர்புபட்ட பண்கள் பற்றிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பண்டைத் தமிழரது இசை பற்றி எழுதப்பட்ட முக்கியமான ஆய்வுநூல், சங்கீதநூல் முதலான பல கட்டுரைகள்

நாடகத்தமிழ்

மதங்கசூளாமணி - வடமொழி நாடக மரபுகள், சேக்ஸ்பியரது நாடக மரபுகள், தமிழ்நாடக மரபுகள் பற்றி ஒப்பிட்டு விளக்கும் ஆய்வு நூல்

(உ)

கைத்தொலைபேசி பாவனை : நன்மைகளும் தீமைகளும்

- இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் பற்றிய அறிமுகம்
- இலத்திரனியல் தொடர்பு சாதனங்களில் கைத்தொலைபேசியின் முக்கியத்துவம்.
- தற்காலத்தில் உணவு, உடை, உறையுள் என்பவற்றுக்கு அடுத்த நிலையில் கைத்தொலைபேசி இருக்கின்ற நிலைமை.

கைத்தொலைபேசியின் நன்மை

- தொடர்பாடலை இலகுபடுத்தியமை. ( அளவில் சிறியது, பாரம் குறைவு, செலவு குறைவு...)
- ஊடகக் குவிமையம்
- பல்லூடகக் கருவி (ஒலி ்ஒளி)
- பொழுதுபோக்குச் சாதனம்
- கல்வித்துறையில் முக்கியமான கருவி ( உடனடி உசாத்துணை, சொற்பொருள் தேடல் - அகராதி)
- பாதுகாப்புக்கு உதவி ( பெண்கள், வயோதிபர்கள் )
- செல்லிட ஊடக வசதி
- சமூக ஊடக பயில்வை அதிகரித்தமை. (முகநூல், ருவிட்டர், வட்ஸ்அப்)

கைத்தொலைபேசியின் தீமைகள்

- வாசிப்புப் பழக்கம் பாதிக்கப்படல்.
- கவனக் கலைப்பான்
- கல்வியைப் பாதித்துள்ளமை.
- மனிதர்களிடையே தொடர்பாடல் அருகியமை.
- உடல் ஆரோக்கியத்துக்குக் கேடு
- எழுத்தாற்றல் வீழ்ச்சி
- பண்பாட்டுச் சீரழிவு


குறிப்பு :

கைத்தொலைபேசிப் பாவனையில் நன்மைகளும் தீமைகளும் உள்ளன. உரிய முறையில் இதனைப் பயன்படுத்துவதன் மூலம் நன்மை பெறலாம்.

| | |
|---|---|
| பொருள் | 08 புள்ளிகள் |
| மொழிநடை | 08 புள்ளிகள் |
| அமைப்பு | 04 புள்ளிகள் |


**(8 + 8 + 4 = 20 புள்ளிகள்)**

**3 வது வினாவுக்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இவ்வினா கட்டாயவினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும். வழங்கப்பட்ட தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 3%
06 - 10 ஆயிடையில் 23%
11 - 15 ஆயிடையில் 63%
16 - 20 ஆயிடையில் 11%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இதில் "அ" பிரிவின் இலகுதன்மை 75% ஆகும். பொதுவாக எல்லாப் பிரிவுகளும் 50% இற்கு மேற்பட்ட இலகுதன்மை கொண்டனவாக அமைந்துள்ளன.

**குறைந்த அடைவுமட்டத்தைப்பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

**மனித விழுமிய மேம்பாடும் இலக்கியமும்** என்ற கட்டுரையில்

- இலக்கியங்கள், அவை பேசும் மனித விழுமியங்கள் என்பவற்றை தொடர்புபடுத்தி கருத்தை முன்வைக்காமை.

**உயர்கல்வி வளர்ச்சிக்கு தனியார் துறையின் பங்களிப்பு** என்ற கட்டுரையில்

- உயர்கல்வி வளர்ச்சியில் தனியார் துறையின் பங்களிப்பினை தொடர்புபடுத்தாமை.
- தனியார் துறையின் பங்களிப்பில் உள்ள சாதக, பாதக விளைவுகளை வேறுபடுத்தி எழுதத் தவறியமை.

**நாட்டு நலன் பேணல் என்ற கட்டுரையில்**

- நாட்டிற்கு நலன் தரும் கூறுகளை இனங்காணத் தவறியமை.
- ஒரு சமூகமே நாடு என்பதை விளக்கிக்கொள்ளத் தவறியமை. (மொழி, சமய பேதம் பாராமை)
- இன ஒற்றுமை நாட்டிற்கு நலன் என்பதை விளங்கிக் கொள்ளாமை.

**முத்தமிழ் வளர்ச்சிக்கு சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய பணிகள் என்ற கட்டுரையில்**

- சுவாமி விபுலாநந்தர் பற்றிய அறிமுகத்துக்கு முக்கியத்துவம் அளித்தமை. (தாய், தந்தை, பிறப்பு)
- அவருடைய எல்லாப் பணிகளையும் வெளிப்படுத்த முற்பட்டமை.
- முத்தமிழ் (இயல், இசை, நாடகம்) என்ற எண்ணக்கருவை விளங்கிக்கொள்ளாமையும் அதை விளங்கிக் கொண்டவர் கூட அவை தொடர்பான விபுலானந்தரின் பணிகளை விளங்கிக்கொள்ளாமை.
- இலக்கியங்களை ஆதாரமாக எடுத்துக் காட்டத் தவறியமை.

**கைத்தொலைபேசிப் பாவனை ; நன்மைகளும் தீமைகளும்**

- அறிமுகம் கைத்தொலைபேசி பற்றியதாகவும் அதன் தோற்றம் வரலாறு பற்றியதாகவும் அமையப் பெற்றிருந்தமை.
- நன்மைகளையும் தீமைகளையும் வேறுபடுத்தி எழுதாமை, ஒரு விடயத்துக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளித்தமை.
- கைத்தொலைபேசியை உரிய முறையில் பயன்படுத்தி நன்மை பெறலாம் என்பதை சுட்டிக்காட்டி எழுதத் தவறியமை.
- அனேகமானோர் இக்கட்டுரையை தெரிவுசெய்தபோதும் தலைப்புக்கு ஏற்ற வகையில் நன்மை, தீமை விபரிக்கும் வகையில் எழுதப்படவில்லை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பல்வேறு தலைப்புக்களை வழங்கி தலைப்பினை விளங்கி எழுதும் ஆற்றலை வளர்த்தல்.
- கட்டுரைத் தலைப்புக்களுக்கான விடயங்களை தேடிப் பெறுவதற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். (பட்டிமன்றம், பேச்சு)
- கட்டுரைத் தலைப்புக்களை வழங்கி அதற்குரிய சட்டகத்தை அமைக்க வழிகாட்டுதல்.
- தலைப்புக்களுக்குப் பொருத்தமாக அமைந்த தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகளை வாசிக்கத் தூண்டுதல்.
- இரண்டு விடயங்கள் இணைந்த நிலையில் தலைப்பு அமையும் போது (உ-ம் : இலக்கியங்களும் அவை பேசும் மனித விழுமியங்களும்) அந்த இரண்டையும் தொடர்புபடுத்தி நோக்க வழிப்படுத்துதல்.
- கட்டுரை தலைப்பினை வழங்கி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.

## பகுதி II

### பிரிவு 'அ'

4. (அ) சங்கமருவிய காலத்தில் எழுந்த நூல்களை அவற்றின் பொருள்மரபின் அடிப்படையில் வகுத்துக்காட்டுக.
(ஆ) சங்ககால இலக்கியமரபு, சங்கமருவிய காலத்திலும் தொடர்ந்தவாற்றை விபரிக்குக.
(இ) சங்கமருவிய காலத்தில் தோன்றிய காவியங்கள் பற்றிக் கருத்துரைக்குக. (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) அறம் சார்ந்தவை

திருக்குறள் நாலடியார் நான்மணிக்கடிகை
இன்னாநாற்பது இனியவை நாற்பது திரிகடுகம்
ஆசாரக் கோவை பழமொழி நானூறு சிறுபஞ்சமூலம்
முதுமொழிக்காஞ்சி ஏலாதி

அகத்திணை நூல்கள்

ஐந்திணை ஐம்பது ஐந்திணை எழுபது திணைமொழி ஐம்பது
திணைமாலை நூற்றைம்பது கார்நாற்பது கைந்நிலை

புறத்திணை நூல்

களவழி நாற்பது

காப்பியங்கள்

சிலப்பதிகாரம் மணிமேகலை

பிரபந்தங்கள்

அற்புதத்திருவந்தாதி திருவிரட்டை மணிமாலை
திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் திருவாலங்காட்டுத் திருப்பதிகம்
முதலாழ்வார் பாசுரங்கள் (அந்தாதிகள்)

இலக்கணநூல்

தொல்காப்பியம் **(5 புள்ளிகள்)**

(ஆ)
- சங்ககாலத்தில் தனிச்செய்யுட்களில் பாடப்பட்ட அகத்திணை மரபு சங்கமருவிய காலத்திலும் தொடர்ந்தமை
  ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார்நாற்பது, கைந்நிலை ஆகிய நூல்கள், அவற்றின் பொருள் மரபு
- சங்ககாலத்தில் வீரத்துடன் தொடர்புபட்ட புறப்பொருள் மரபு சங்கமருவிய காலத்திலும் தொடர்ந்தமை. களவழி நாற்பது புறத்திணை மரபைக் கூறிநிற்கின்றது.
- சங்ககாலத்தில் ஆங்காங்கே காணப்பட்ட அறச்சிந்தனைகள் சங்கமருவிய காலத்தில் பெருமளவில் செல்வாக்குப் பெற்று தனி இலக்கிய வகையாக அமைந்தமை.
- திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகியவற்றில் தோற்றம் பெற்ற பக்தி இலக்கிய மரபு காரைக்கால் அம்மையார், முதலாழ்வார்கள் பாடல்களில் விருத்தியுற்றமை.
- அகவல், தாழிசை முதலான பாவடிவங்கள் சங்கமருவிய காலத்திலும் பயன்படுத்தப்பட்டமை.

**(5 புள்ளிகள்)**

(இ) சங்கமருவிய காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இருகாப்பியங்கள் தோன்றின.


- சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் பாடப்பட்டது. புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டது. தமிழின் முதல் காப்பியமென்று கருதப்படுகின்றது. அரசியல் பிழைத்த அரசர்களுக்கு அறமே கூற்றுவனாக அமைவதையும், புகழ்பெற்ற கற்புடைய மங்கையர் உயர்ந்தோரால் போற்றப்படுவதையும், ஒருவன் செய்த வினை தப்பாது தன் பயனைத் தரும் என்பதையும் உணர்தும் நோக்கில் பாடப்பட்டது. கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய முக்கிய மூன்று பாத்திரங்களையும் பல துணைப் பாத்திரங்களையும் கொண்டமைந்தது. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று போற்றும் வகையில் மிகச் சிறந்த கவிதை வளமுடையது.

- மணிமேகலை ஒரு வகையில் சிலப்பதிகாரக் கதையின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. மதுரை கூலவாணிகன் சாத்தனாரால் பாடப்பட்டது. கோவலன், மாதவி ஆகியோரின் மகளான மணிமேகலை இக்காப்பியத்தின் தலைவி . காப்பிய ஆசிரியர் பௌத்த மதக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக இக்காப்பியத்தைப் பயன்படுத்தியுள்ளார். சமுதாயத்தொண்டும் துறவொழுக்கமும் சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகின்றன. இரு காப்பியங்களும் அகவற்பாவில் அமைந்தவை.

**(5 புள்ளிகள்)**

**(5 x 3 = 15 புள்ளிகள்)**


**4 வது வினாவுக்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இவ்வினா தெரிவு வினாவாக அமைந்துள்ளது. இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.

இதில் 00 - 03 ஆயிடையில் 14%
04 - 07 ஆயிடையில் 25%
08 - 11 ஆயிடையில் 36%
12 - 15 ஆயிடையில் 25%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவில் கூடிய இலகுதன்மை கொண்டதாக பகுதி (அ) காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- சங்கமருவிய கால இலக்கியங்களை தவறாக வகைப்படுத்தியமை.
- சங்ககாலத்தில் பரிபாடல், திருமுருகாற்றுப்படை என்பவற்றில் புலனாகத் தொடங்கிய பக்தி இலக்கிய மரபு சங்கமருவிய காலத்தில் காரைக்காலம்மையார், முதலாழ்வார்களுடாகத் தொடர்ந்தமை பெரும்பாலான பரீட்சார்த்திகளால் எடுத்துக்காட்டப்படவில்லை.
- சங்கமருவிய காலத்தில் எழுந்த காப்பியங்களான சிலம்பு, மேகலை என்பவற்றைச் சுட்டிக்காட்டிய போதிலும் அவை ஒவ்வொன்றும் பற்றிக் கருத்துரைக்கத் தவறியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- சங்கமருவிய கால இலக்கியங்களை பொருள்மரபு அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுதல்.
  உ-ம் : அறம் சார்ந்தவை, அகம், புறம், காப்பியங்கள், பிரபந்தங்கள், இலக்கண நூல்
- ஒரு காலத்தில் தோன்றிய இலக்கியங்களையும் அவற்றின் பண்புகளையும் மற்றொரு கால இலக்கியங்களோடு தொடர்புபடுத்தி அவற்றின் இயல்புகளை அறிய வழிப்படுத்தல்.
- குறித்த காப்பியங்கள் பற்றிய தெளிவினை ஏற்படுத்துதல்.

5. (அ) பல்லவர் காலம் **பக்தி இலக்கிய காலம்** என்று அழைக்கப்படுவதற்கான காரணங்களை விளக்குக.
(ஆ) அக்காலத்தில் பக்தி அனுபவத்தைப் புலப்படுத்துவதற்குச் சங்ககால அகத்திணை மரபு பயன்படுத்தப்பட்டவாற்றை விளக்குக.
(இ) பக்தி இலக்கிய வளர்ச்சியில் ஆண்டாளின் பங்களிப்பினை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

(அ) பல்லவர் காலம் பக்தி இலக்கிய காலம் என்று அழைக்கப்படுவதற்கான காரணங்கள்.

- பக்தி இலக்கியங்கள் பெருவாரியாகத் தோன்றியமை. (சைவ, வைணவ தேவாரங்களும் பாசுரங்களும்)
- சைவ, வைணவ மதங்களின் எழுச்சி (இயக்க ரீதியான செயற்பாடுகள், அரசுகளின் ஆதரவு, ஆலயங்களின் உருவாக்கம்)
- பக்தி சார்ந்த சிற்றிலக்கியங்களின் தோற்றம் **(5 புள்ளிகள்)**

(ஆ) பக்தி அனுபவத்தை புலப்படுத்துவதற்குச் சங்ககால அகத்திணை மரபு பயன்படுத்தப்பட்டவாறு

- சங்ககால அகத்திணை மரபைத் தமது கருத்தியலுக்கு ஏற்ப இலக்கிய உத்தியாக பயன்படுத்துதல்.
  - இறைவனைத் தலைவனாகவும் அடியார்கள் தங்களைத் தலைவியாகவும் பாவனை செய்தல்.
  - காமம் மிக்க கழிபடர்க் கிளவி (பிரிவுத்துயர் ஆற்றாமை)
  - மரபுகளை மீறுதல். (சுட்டியொருவர் பெயர்கூறல், மடலூரல், கைக்கிளை)

**(5 புள்ளிகள்)**


(இ) பக்தி இலக்கிய வளர்ச்சியில் ஆண்டாளின் பங்களிப்பு

- வைணவ பக்தி இலக்கிய மரபில் ஆண்டாள்
- நாச்சியார் திருமொழியும், திருப்பாவையும்.
- ஆண்டாள் பாசுரங்களின் தனித்துவம்
  - உணர்ச்சி வெளிப்பாடும் மொழியும்

**(5 புள்ளிகள்)**


**(3 x 5 = 15 புள்ளிகள்)**

**5 வது வினாவுக்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




தெரிவு வினாவாக அமையும் இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.
இதில் 00 - 03 ஆயிடையில் 36%
04 - 07 ஆயிடையில் 34%
08 - 11 ஆயிடையில் 22%
12 - 15 ஆயிடையில் 8%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 70% ஆனோர் 7 புள்ளிகளை விட குறைவாகவும் 30% ஆனோர் 8-15 இடையிலான புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.




இவ்வினா மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் "இ" பிரிவு வினா இலகுதன்மை குறைந்ததாக அமைந்துள்ளது. ஏனைய இரண்டும் 47% இலகுதன்மை உடையனவாக அமைந்துள்ளன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.:**

- பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் பரீட்சார்த்திகளால் எடுத்துக்காட்டப்பட்ட போதிலும் அவை தோன்றியமைக்கான பின்னணி எடுத்துக்காட்டப்படவில்லை.
- சங்ககால அகத்திணை மரபு, பக்தி அனுபவத்தைப் புலப்படுத்துவதற்கு உதவியவாற்றை பொதுப்படையாக விவரித்தபோதிலும் நுட்பமாகப் பகுத்தாய்ந்து கூறப்படவில்லை.
- ஆண்டாள் பற்றியும் ஆண்டாளின் இலக்கியங்கள் பற்றியும் குறிப்பிட்டபோதிலும் பக்தி இலக்கிய வளர்ச்சிப் போக்கில் ஆண்டாள் பெறும் இடத்தினை உணர்த்தத் தவறியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- ஒவ்வொரு காலமும் அவ்வக் காலத்தில் முக்கியத்துவம் பெறும் இலக்கிய வகையின் பெயரால் சிறப்பித்துச் சுட்டப்பெறுவதையும் அதன் பொருத்தப்பாட்டையும் தெளிவாக விளக்குதல்.
- குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்களின் வடிவம், செய்யுள்மரபு, பொருள்மரபு ஆகியன அடுத்துவரும் காலத்திலும் தொடர்புபடுவதை எடுத்துக்காட்டுதல்.
- ஒவ்வொரு காலகட்டத்திலும் முக்கியத்துவம் பெறும் படைப்பாளிகள் பற்றியும் அவர்களது ஆக்கங்கள் பற்றியும் அவற்றின் தனித்துவம் பற்றியும் அறியச் செய்தல்.

6. (அ) விஜயநகர நாயக்கர் காலத்தில் வழக்கிலிருந்த சிற்றிலக்கிய வடிவங்கள் யாவை ?
(ஆ) காளமேகப் புலவரின் கவியாற்றலை விளக்குக.
(இ) விஜயநகர நாயக்கர் காலத்தில் தோன்றிய பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் பற்றிக் கருத்துரை வழங்குக. (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(அ) விஜயநகர நாயக்கர் காலத்தில் வழக்கிலிருந்த சிற்றிலக்கிய வடிவங்கள்

- பரணி : மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி, அஞ்ஞைவதைப் பரணி
- உலா : திருவாரூருலா, திருக்காளத்திநாதருலா, ஏகாம்பரநாதருலா, மதுரைச் சொக்கநாதருலா
- கலம்பகம் : மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், தில்லைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம்
- பிள்ளைத் தமிழ் : மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
- நான்மணிமாலை : நால்வர் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை
- மும்மணிக்கோவை : பண்டார மும்மணிக்கோவை, சிதம்பர மும்மணிக்கோவை
- தூது : சிவஞானபாலய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது.

**(5 புள்ளிகள்)**

(ஆ) காளமேகப் புலவரின் கவியாற்றல்

- பெயர்க்காரணம்
- சிலேடைக்கவி, வசைக்கவி, ஆசுகவி முதலியவற்றைப் பாடுவதில் வல்லவர்.
- யமகம், திரிபு, மடக்கு முதலிய சொல்லலங்காரங்களில் வல்லவர்.
- அங்கதச்சுவை மிக்க பாடல்களைப் பாடியவர்.
- தனிச் செய்யுள்களும் பிரபந்தங்களும் பாடியவர். **(5 புள்ளிகள்)**


(இ) பொதுமக்கள் சார்பான இலக்கியம் பற்றிய அறிமுகம்

- பள்ளு, குறவஞ்சி, அம்மானை, கீர்த்தனை, நொண்டி நாடகம்
  உதாரணம் : முக்கூடற்பள்ளு, திருக்குற்றாலக் குறவஞ்சி
- நாடகப் பாங்கு
- இசைப் பாங்கு
- நகைச்சுவை
- மொழி எளிமை (பேச்சு மொழிப் பயன்பாடு)
- சமயத்தை பொதுமக்கள் மயப்படுத்துதல்
- அடிநிலை மக்களது வாழ்க்கையைப் பிரதிபலித்தல்.

**(5 புள்ளிகள்)**

**(5 x 3 = 15 புள்ளிகள்)**


**6 வது வினாவுக்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




தெரிவு வினாவாக அமையும் இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.

இதில் 00 - 03 ஆயிடையில் 29%
04 - 07 ஆயிடையில் 23%
08 - 11 ஆயிடையில் 29%
12 - 15 ஆயிடையில் 19%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவின் (அ) பிரிவு இலகுதன்மை குறைவானது. அது 44% ஆகும். (ஆ), (இ) ஆகிய பிரிவுகள் முறையே 52%, 57% இலகுதன்மையுடையவை.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- நாயக்கர் காலத்துத் தோன்றிய சிற்றிலக்கிய வடிவங்களுள் பலவற்றைப் பற்றிக் குறிப்பிடத் தவறியமை.
- காளமேகப்புலவரின் படைப்பாளுமை பற்றிய போதிய தெளிந்த அறிவு காணப்படாமை.
- பொதுமக்கள் சார்பான இலக்கியம் என்றால் என்ன? என்பது பற்றிய தெளிவின்மை காணப்பட்டமை, பள்ளு குறவஞ்சி, நொண்டி நாடகம் ஆகியவற்றைக் கூறத் தவறியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- நாயக்கர் காலத்தில் தோன்றிய இலக்கிய வடிவங்களைக் குறிப்பிட்டு அவற்றின் அமைப்பினையும் இயல்பினையும் அறிந்துகொள்ளச் செய்தல்.
- காளமேகப் புலவர் போன்ற முக்கியமான புலவர்களின் படைப்பாளுமை பற்றி அறியச்செய்தல்.
- பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் பற்றிய விளக்கம் கொடுக்கப்படல் வேண்டும்.

## பிரிவு 'ஆ'

7. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பாக ஈழத்தில் எழுந்த,
   (அ) புராணங்கள்
   (ஆ) பள்ளுப் பிரபந்தங்கள்
   (இ) அந்தாதிகள்
   என்பன குறித்துக் கருத்துரைக்குக. (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

(அ) புராணங்கள் :

தலம் பற்றியவை

- தஷிணகைலாச புராணம் (திருக்கோணேஸ்வரத் தலப்பெருமை கூறுவது.சிங்கைச் செகராச சேகரனால் இயற்றப்பட்டது. பண்டிதராசர் இயற்றியதாகவும் கூறப்படுகிறது.)
- திருக்கரசைப் புராணம்

விரதம் பற்றியவை

- ஏகாதசி புராணம், சிவராத்திரி புராணம், பிள்ளையார் கதை
  (இவற்றை வரத பண்டிதர் இயற்றினார்.)

கிறிஸ்தவ சமயம் சார்பானவை.

- யோசேப்பு புராணம் (கூழங்கைத் தம்பிரான்)
- தேவ அருள் வேத புராணம்

ஏனையவை

- வியாக்கிரபாத புராணம் (வைத்தியநாத முனிவர் )
- வலைவீசு புராணம் (சு. முத்துக்குமாரர்) **(6 புள்ளிகள்)**

(ஆ) பள்ளுப் பிரபந்தங்கள்

- சைவ சமயம் சார்ந்தவை.

கதிரைமலைப் பள்ளு :

கதிர்காமம் பற்றியது.
இயற்றியவர் பெயர் அறியப்படவில்லை.
மூத்தபள்ளி, பள்ளன், பண்ணைக்காரன் ஆகியோர் ஈழநாட்டவர், இளையபள்ளி தமிழ் நாட்டவள்.

பறாளை விநாயகர் பள்ளு :

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்.
பறாளையில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான்மீது பாடப்பட்டது.

கிறிஸ்தவ சமயம் சார்பானது.

- ஞானப்பள்ளு யேசுநாதரை பாட்டுடைத் தலைவராக கொண்டது.
  இயற்றியவர் பெயர் அறியப்படவில்லை.

பிரபுத்துவம் சார்பானது.

- தண்டிகைக் கனகராயன் பள்ளு (மாவை சின்னக்குட்டிப் புலவர்)

  தெல்லிப்பழை கனகநாயக முதலி என்னும் பிரபுவைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.

  அவரது முன்னோரான கனகராயன் பெயரால் வழங்கப்பெறுவது.

**(6 புள்ளிகள்)**


(இ) அந்தாதிகள்

- கல்வளையந்தாதி (நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் )
- மறைசையந்தாதி (நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் )
- புலியூர் அந்தாதி (மாதகல் மயிவாகனப் புலவர் )

**(3 புள்ளிகள்)**

**(6 + 6 + 3 = 15 புள்ளிகள்)**


**7 வது வினாவுக்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




தெரிவு வினாவாக அமைந்துள்ள இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.

இதில் 00 - 03 ஆயிடையில் 36%
04 - 07 ஆயிடையில் 31%
08 - 11 ஆயிடையில் 22%
12 - 15 ஆயிடையில் 11%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




மூன்று பிரிவுகளைக் கொண்ட இவ்வினாவின் இலகுதன்மை குறைவானதாகவே காணப்படுகின்றது. பிரிவு 'இ' மிகக் குறைவான இலகுதன்மை கொண்டதாக உள்ளது. அது 38% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை :**

- ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பாக என்பதை விளங்கிக்கொள்ளாது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் எழுந்த நூல்களையும் குறிப்பிட்டிருந்தமை.
- "ஈழத்தில் எழுந்த" என்ற சொற்றொடரைக் கவனத்தில் கொள்ளாது தென்னிந்தியாவில் எழுந்த நூல்களையும் குறிப்பிட்டிருந்தமை.
- நூல்களின் பெயர்களை குறிப்பிட்டார்களேயொழிய அவை பற்றிக் கருத்துரைக்கத் தவறியமை.
- அந்தாதிகள் பற்றிக் குறிப்பிடத் தவறியமை.
- குறிப்பிடப்படவேண்டிய நூல்களுட் பெரும்பாலானவை குறிப்பிடப்படாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- ஈழத்து இலக்கிய வரலாற்றைக் கால அடிப்படையில் பகுத்து அக்காலத்தில் எழுந்த நூல்களை வகைப்படுத்தி விளக்குதல்.
- இலக்கியங்களின் வடிவம், பண்புகள் மற்றும் இலக்கிய வடிவங்களுக்கிடையிலான வேறுபாடுகள் பற்றித் தெளிவுபடுத்துதல்.

**8.** இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய காலத்தில்,
(அ) தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வாய்ப்பான சூழல் உருவாகியமை
(ஆ) தமிழ் உரைநடை விருத்தி கண்டமை
(இ) நாவல் இலக்கியம் தோன்றி வளர்ந்தமை
என்பன குறித்து விளக்குக. (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

(அ)
- அச்சு இயந்திரத்தின் வருகை
- பொது நிர்வாக, பாடசாலைக் கல்வித் தேவைகள்
- பத்திரிகைகளின் தோற்றம்
- சமயப் பிரச்சாரம்
- நவீன கல்வி முறையும் பாட நூல்களும்
- நவீன இலக்கிய வடிவங்களின் தோற்றம் **(5 புள்ளிகள்)**


(ஆ)
- பன்முகத் தேவைப்பாடுகளுக்கேற்ற விதத்தில் உரைநடை மாற்றம் பெற்றமை.
- சந்தி விகாரங்களைத் தவிர்த்த எளிமையான உரைநடை - தர்க்கரீதியான நடை
- பத்திரிகைத் தமிழ்
- அறிவியல் தமிழ்
- ஆக்க இலக்கிய நடை (உணர்ச்சி, கற்பனை வெளிப்பாடு)
- நிறுத்தக்குறிப் பயன்பாடு **(5 புள்ளிகள்)**

(இ)
- ஆங்கிலக்கல்வி
- மத்திய தர வர்க்கத்தின் தோற்றம்
- சமூக சீர்திருத்த நாட்டம்
- பிரசுர வாய்ப்பு பத்திரிகைத் தேவைகள்
- ஆரம்பகால நாவல்கள் (1885 - 1905)
  அசன்பே சரித்திரம்
  மோகனாங்கி
  உசோன் பாலந்தை கதை
- சமூகப் பிரச்சினைகள்
  நொருங்குண்ட இருதயம் (மங்களநாயகம் தம்பையா)
  காசிநாதன் நேசமலர் (ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை)
  நீலகண்டன் ஒரு சாதி வேளாளன் (இடைக்காடர்)
  பாசம் (சம்பந்தன்)
- துணிகரச் செயல்கள்
  இரத்தினாவளி அல்லது காதலின் மாட்சி (எச். செல்லையா)

**(5 புள்ளிகள்)**

**(5 x 3 = 15 புள்ளிகள்)**


**8 வது வினாவுக்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




தெரிவு வினாவாக அமையும் 8 ஆவது வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.

இதில் 00 - 03 ஆயிடையில் 53% ஆனோர்
04 - 07 ஆயிடையில் 27% ஆனோர்
08 - 11 ஆயிடையில் 16% ஆனோர்
12 - 15 ஆயிடையில் 14% ஆனோர்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 80% ஆனோர் 7 அல்லது அதற்கு குறைவாகவும் 20% ஆனோர் 7 புள்ளிகளுக்கு கூடுதலாகவும் பெற்றுள்ளனர்.




மூன்று பிரிவுகளைக் கொண்ட இவ்வினாவின் இலகுதன்மை குறைவானதாகவே காணப்படுகின்றது. 'இ' பிரிவு ஆகக் குறைந்த இலகுதன்மை கொண்டதாக உள்ளது. அது 20% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- இலங்கையில் ஆங்கிலேயர் காலத்தில் உரைநடை வளர்ச்சிக்கு வாய்ப்பாக இருந்த பிரதான காரணிகள் பற்றி விளக்கி எழுதத் தவறியமை.
- உரைநடை வளர்ச்சி பற்றிய தெளிவின்மையால் பொருத்தமான விடயங்களை முன்வைக்காமை.
- கால வரையறையைக் கவனத்திற் கொள்ளாதும், நாவல் இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்காதும் பொதுவாக நாவல்களின் பெயர்களை மட்டுமே குறிப்பிட்டிருந்தமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உரைநடை வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்த காரணிகளை எடுத்துக்காட்டுதல். (அச்சு, ஆங்கிலக் கல்வி முதலியன)
- உரைநடை பல்வேறு வகையில் வளர்ச்சியடைந்த விதம் பற்றி அறியச்செய்தல். (சமயநூல்கள், கண்டனங்கள், பதிப்புகள், உரைகள்)
- நாவல் இலக்கியத்தின் தோற்றம், அதன் தொடர் வளர்ச்சி பற்றி விளக்குதல்.

2.2.3 வினாத்தாள் II இற்கு விடையளித்துள்ளமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.

- இலக்கண அறிவு போதுமானதாகக் காணப்படவில்லை.
  - உதாரணங்களை எடுத்துக்காட்டி விதிகளை விளக்கி, கலந்துரையாடியபின் பயிற்சிகளை வழங்குதல்.

- கிரகித்தல் தொடர்பாகக் கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதாமையும் தேவையற்ற விடயங்களைக் குறிப்பிட்டிருந்தமையும்.
  - தரப்பட்ட பகுதியைக் கருத்தூன்றி வாசித்துக் கிரகிப்பதுடன் கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமாக விடையெழுதுவதற்கும் பயிற்சிகள் வழங்குதல்.

- கருத்துக்களின் தொடர்பைப் பேணாது சுருக்கம் எழுதப்பட்டிருந்தமை.
  - பந்தியில் இடம்பெறும் பிரதான கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு தொடர்பினைப் பேணி சுருக்கம் எழுதுவதற்குப் பயிற்சிகள் வழங்குதல்.

- கட்டுரைத் தலைப்பை விளங்கி அதற்குப் பொருத்தமான போதிய விடயங்களை முன்வைத்து எழுதாமை.
  - கட்டுரைத் தலைப்புகள் பலவற்றுக்கும் பொருத்தமான தகவல்களைத் தேடியறிந்து சட்டகம் ஒன்றைத் திட்டமிட்டு கட்டுரை எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.

- இலக்கிய வரலாற்று வினாக்களில் கேட்கப்பட்ட விடயத்தை விளக்காது பொருத்தமற்ற கருத்துக்களை முன்வைத்து எழுதியிருந்தமை.
  - வினாக்களைக் கருத்தூன்றி வாசித்து அதில் இடம்பெறும் பிரதான சொல் / சொற்றொடர்களை இனங்கண்டு அவற்றை விளங்கி விடையெழுதுவது பற்றிக் கலந்துரையாடுதல்.

## பாகம் III

### 3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

#### 3.1. விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

**பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைகள்**

* விடை எழுதத் தொடங்க முன்னர் வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, கட்டாய வினாக்கள் எவை, ஒதுக்கப்பட வேண்டிய நேரம், பெறக்கூடிய மொத்தப் புள்ளிகள் என்பன பற்றிய விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் வினாக்களை நன்கு வாசித்து சரியாக விளங்கிக் கொண்ட பின் வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.
* வினாப்பத்திரம் I, II ஆகியவற்றின் பகுதி II இற்குரிய வினாக்களுக்கு விடையளிக்கும் போது முக்கியமான வினாக்களுக்குரிய விடைகளைப் புதிய பக்கத்தில் எழுத ஆரம்பித்தல் நன்று.
* வினாப்பத்திரம் II இன் பகுதி I இற்குரிய விடைகளை வினாவுக்கு எதிரே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் சரியான விடையின் இலக்கத்தை வினாப்பத்திரத்திலேயே குறிப்பிடுதல் வேண்டும்.
* வினா இலக்கம், பகுதி, உபபகுதி என்பவற்றின் குறியீடுகளைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
* ஒரு வினாவின் யாதாயினும் உபபகுதியொன்றுக்கு விடை எழுதாவிட்டால் அந்த உபபகுதிக்குரிய எழுத்து அல்லது உரோமன் இலக்கத்தை எழுதி அதற்கு எதிரே கோடு ஒன்றை இடுதல் வேண்டும்.
* கட்டாய வினாக்களுக்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டுமென்பது நீங்கள் அறிந்ததே. அதேவேளை கட்டாய வினாக்கள் தவிர்ந்த ஏனைய வினாக்கள் அனைத்தையும் ஒரு தடவை வாசித்த பின்னர் விடை எழுத நீங்கள் உத்தேசித்துள்ள வினாக்களை அடையாளமிட்டுக் கொள்க.
* வினாத்தாளில் காணப்படும் வினா இலக்க ஒழுங்குக்கமைவாக இல்லாது உங்களால் மிக நன்றாக விடை எழுதக் கூடிய வினாக்களுக்கு விடைகளை எழுதத் தொடங்குக.
* வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு வினாக்களைத் தெரிவு செய்வதுடன் மேலதிகமாக வேறு வினாக்களுக்கு விடை எழுதுவதைத் தவிர்த்துக் கொள்க.
* விடைத்தாளில் எல்லாப் பக்கங்களிலும் சுட்டெண்ணைக் குறிப்பிடுக.
* விடை எழுதும் போது நேரத்தைச் சரியாக முகாமை செய்வதில் கவனம் செலுத்துக.
* விடை எழுதுவதற்கு சிவப்பு, பச்சை நிறப் பேனைகளைப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்க.
* குறு விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்கு நீண்ட விடைகளையும், நீண்ட விடைகளை எதிர்பார்க்கப்படுவனவற்றுக்கு குறு விடைகளையும் எழுதுவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.
* நீண்ட விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்குத் தர்க்கரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் விடயங்களை முன்வைத்தல் ஏற்றதாகும்.

## 3.2 கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

**ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்**

* தமிழ்ப் பாடத்திற்குரிய தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், பாட உள்ளடக்கம், கற்றல் பெறுபேறுகள் பற்றிய தெளிவான அறிவு மொழி கற்பிக்கும் ஆசிரியருக்கு இன்றியமையாததாகும்.

* கற்பிக்க வேண்டிய பாடப்பகுதிகள் தொடர்பான ஆழமான அறிவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மேலதிக நூல்களைப் படித்தல் பயனுடையதாகும்.

* பாடத்திட்டத்திலும் ஆசிரியர் வழிகாட்டியிலும் அறிவுறுத்தப்பட்டதற்கமைய கற்பித்தல் பணியில் ஈடுபடுதல் பொருத்தமானதாகும். இவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றிய தெளிவான அறிவும் தேவைப்படும்.

* கட்டுரை எழுதுதல், சுருக்கம் எழுதுதல் பயிற்சி கிரமமாக வழங்கப்பட்டு அவை திருத்தப்பட்டு பின்னூட்டல் வழங்குதல் அவசியமானதொன்றாகும்.

* மாணவருக்கு மொழி கற்பித்தலில் ஆர்வத்தைக் காட்டும் வகையில் அவர்களது ஆக்கத்திறன் விருத்திக்கான செயற்பாடுகள் வழங்கலாம். குறிப்பாக கட்டுரை, சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம் போன்றவை. எழுதுவதற்கான துலங்குதல் அளித்தல் பயனுடையதாகும்.

* பரீட்சையை மட்டும் மையமாகக் கொண்டு கற்பிக்கும் முறையைத் தவிர்த்துக் கொள்வது சிறந்தது.

* ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த தகவல் தொழினுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது சாலச் சிறந்தது.

* மாணவர்களிடையே கருத்துரைக்கும் திறன், கற்பனைத் திறன், சுருக்கி எழுதும் திறன், பெருக்கும் திறன் போன்றவற்றை விருத்தி செய்ய வேண்டுமானால் நூல்நிலையப் பயன்பாடு அவசியமானதாகும்.

* கட்டுரை அமைப்பிலான வினாக்களுக்கு விடையளிக்கும்போது அறிவுறுத்தற் செயற்பாட்டுப் பதங்களான விவரித்தல், விளக்குதல், ஆராய்தல், விமர்சித்தல், ஒப்பிடுதல், கருத்துரைத்தல், நியாயப்படுத்தல் ஆகியனவற்றின் அர்த்தத்தை விளங்கி எழுதவேண்டுமென்பதை வலியுறுத்தல் வேண்டும்.

* உயர் தர வகுப்புகளில் தமிழ் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒன்றுகூடி மொழி கற்பித்தல் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளைக் கலந்துரையாடல் நல்லது. இதற்கான ஒழுங்குகள் வலயக் கல்விப் பணிப்பாளரினால் மேற்கொள்ள முடியுமாயின் சாலச் சிறந்தது.

* ஆசிரியர்கள் பாடம் தொடர்பாகத் தமக்கு எழும் சந்தேகங்களைச் சக ஆசிரியர்களையும் சேவைக்கால ஆலோசகர்களையும் துறைசார் நிபுணர்களையும் அணுகியே தீர்த்துக் கொள்ள முடியுமென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

* ஆசிரியர்கள், பல்தேர்வு, குறுவிடை, கட்டமைப்பு மற்றும் கட்டுரை வகையிலான வினாக்கள் தயாரிப்பதில் போதிய திறனைப் பெறல் அவசியம்.

* ஒப்படையைத் திருத்தும் முறை பற்றியும் பின்னூட்டல் வழங்கும் முறை பற்றியும் தெளிவான அறிவு இருத்தல் இன்றியமையாததாகும்.